NEW MASTER INSTITUTE
90 A/L & 91
Week End Classes
(Sat & Sun)
ஆசிரியர் குழு
PHYSICS - திரு. வர்ணம்
CHEMISTRY - திரு. தில்லைநாதன்
BOTANY - திரு. குகாதரன்
ZOOLOGY - திரு. நாகநாதன்
PURE & APPLIED-MATHS
திரு. நல்லையா.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
A/L 91
Week End Classes
நடைபெறுகின்றன.
7.30 - PURE & APPLIEDMATHS
7.30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - CHEMISTRY
11.30 - PHYSICS

சுடர்: 4 சுக்கில ஆடு வைகாசி மீ 32 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஃதா பிறை 9 (14 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 161

# மாணவரைப் பாதுகாக்க ஐந்து அம்சக் கோரிக்கை

## யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சகல தரப்பினருக்கும் விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம் ஜூன் 14

மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஐந்து அம்சக் கோரிக்கை ஒன்றை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி வெளியிட்டிருக்கிறார்.

பொதுமக்கள், அதிபர்கள், மாணவர்கள், ஆயுதம் தாங்கியோர், அரசியல் வாதிகள், படையினர் உட்பட சகல தரப்பினருக்கும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

பத்திரிகைகள் மூலமாக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாதுகாப்புக்கு அதிபர்களும், அதிகாரிகளும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று மாணவர்கள் கேட்டுள்ளார்கள்.

மாணவர்களும் ஆசிரியர்களும் ஆயுதந் தாங்கியவர்களின் நடவடிக்கையினாலேயே பாதிக்கப்படுகின்றனர். அவ்வாறு இருக்க அதிபர்களையும் அதிகாரிகளையும் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கு

( 8ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ. சி. ஈ. முடிவுகள் இருவாரத்தில்

கொழும்பு ஜூன் 14

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைப்பெறுபேறுகள் இன்னும் இருவாரங்களில் வெளியிடப்படும்.

பரீட்சைத்திணைக்கள ஆணையாளர்திரு. ஆதர் வெதமுல்ல இத்தகவலை வெளியிட்டார்;

பழைய, புதிய பாடத்திட்டங்களின் கீழ் அமர்ந்த ஐந்து லட்சம் பரீச்சாத்திகள் இப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்' [உ]

## யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று விரிவுரை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம். ஜூன் 14

பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று புதன் கிழமை தமது விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது;

அறிக்கைவிவரம் வருமாறு;-

மாணவர்கள் மீதான கைது செய்தல் நடவடிக்கைகள், கொலைகள், துன்புறுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இதற்கெதிரான மாணவர்களின் போராட்ட உணர்வு நியாயமானது; உரிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டியது. இவ்வகையில் பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு யாழ் பல்

[ 8 ஆம் பக்கம் பார்க்க]

## வட-கிழக்கு பாடசாலைகளை திறக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளையும் 12ஆம் திகதி முதல் திறக்கவேண்டும் என்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கடந்த 8ஆம் 9ஆம் திகதிகளில் பாடசாலைகளை மூட மத்திய கல்வி அமைச்சு உத்தரவிட்டது தெரிந்ததே.

12ஆம் திகதி முதல் சகல பாடசாலைகளையும் திறக்கும்படி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்விக்குப் பொறுப்பான அமைச்சரான முதல் அமைச்சர் என்னைப்பணித்துள்ளார்.

இது சம்பந்தமான மேலதிக பணிப்புரைகள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சால் மாகாண சூழ் நிலைக்கு ஏற்ப அனுப்பப்படும்.

—இப்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

## நீதிமன்றில் ஆஜராகுமாறு ரெனிக்கு நோட்டீஸ்!

கொழும்பு, ஜூன் 14

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லை வருகிற ஜூலை 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் அவர் மீது தாக்கல் செய்த நம்பிக்கை மோசடி வழக்கு தொடர்பாக இந்த அழைப்பாணையை அனுப்பும் படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்கா உத்தர விட்டார்.

இரகசியப் பொலீஸ்திணைக்களம் ஊடாக அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## கொழும்பில் இன்று பெரும் ஆர்ப்பாட்டம்?

கொழும்பில் இன்று புதன் கிழமை பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவிருப்பதாக துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்காலை மற்றும் தென் பகுதிக் கிராமங்களில் இத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும். வீட்டுக்கு இருவர் வீதம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவற்றில் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (உ-எ)

## முச்சந்தி முரளி



அப்ப......கொழும்பு ஹோட்டல்காரரின்டை காட்டிலை மழை எண்டு சொல்லுங்கோ.

## மாவின் விலையில் உயர்வில்லை

கொழும்பு, ஜூன் 14

கோதுமை மாவின் விலை உயர்த்தப்படவில்லை. மாவுக்குத் தட்டுப்பாடும் இல்லை;

இவ்வாறு கூ. மொ. வி. ஸ்தாபனத் தலைவர் தெரிவித்திருக்கிறார். உலகச் சந்தையில் கோதுமைமாவின் விலை தொன் ஒன்றுக்கு 85 டாலரால் அதிகரித்துள்ளது.

ஆயினும் அரசு பழைய விலைக்கே கோதுமை மாவை விற்பனை செய்துவருவதாக கூ. மொ. வி. தலைவர் திரு. எப். பி. ஆர். டி. சில்வா தெரிவித்தார். (அ-எ)

## நெல்லியடியில் நேற்று இரு வர்த்தகர்கள் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 14

நேற்று நெல்லியடிப் பகுதியில் கடை உரிமையாளர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

காலை சுமார் 9-30 மணியளவில் யாழ். வீதியில் உள்ள பெற்றோல் விற்பனை நிலையமொன்றுக்கு சமீபத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் இவர்கள் சுடப்பட்டனர்.

கடைகளில் இருந்து கூட்டிச் செல்லப்பட்ட அவர்கள் இருவரும் அனேகமாக ஒரேநேரத்தில் முன்னுக்குப் பின்னராக சுடப்பட்டனர்.

கொலையுண்டவர்கள் நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வல்லிபுரம் சிவசோதி (46 வயது), சரஸ்வதி ஸ்ரோஸ் உரிமையாளர் சி. எஸ். சுப்பிரமணியம் (வயது 50) ஆகியோராவர்.

இறந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

சம்பவத்தைஅடுத்து நெல்லியடி அமைதிப்படை முகாமுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் ஊர்வலமாகச் சென்று முறையிட்டனர். [ஒ-9-70-160]

## வவுனியாவுக்கு அப்பால் அரச பஸ்கள் ஓடவில்லை

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் எதுவும் நேற்று வவுனியாவுக்கு அப்பால் சேவையாற்றவில்லை. இங்கிருந்து சென்ற மட்டக்களப்பு பஸ்ஸும் வவுனியாவுடன் திரும்பி வந்தது.

ஹர்த்தால் ஒன்றுக்கு ஜே. வி. பி. அழைப்பு விடுத்துள்ளதையும், தென்பகுதி போக்குவரத்துச் சபைச் சாலைகள் சில வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதையும் அடுத்தே இந்த போக்குவரத்து ஸ்தம்பித நிலை ஏற்பட்டிருக்கிறது,

இதனை அடுத்து வ.பி.போ.ச. அடுத்த சில தினங்களுக்கு வவுனியாவுக்கு அப்பால் செல்லும் சேவையினை இடைநிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

இதேவேளை தனியார் போக்குவரத்துக்கள் நேற்று வழமை போல் நடைபெற்றன. யாழ் தேவி ரயிலும் வவுனியா வரை வந்து சென்றது.

இதற்கிடையில் நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த அரச பஸ் ஒன்று இடை வழியில் மறிக்கப்பட்டு கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டனவாம். (ஒ-9-164)

# இலங்கை இராணுவம் இங்கே வரத் தேவையில்லை - முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன். 14

தென்பகுதியில் தமிழர்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கிறது. தென்பகுதியில் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் அதை விட்டுவிட்டு, இலங்கை இராணுவம் வடக்கு, கிழக்கிற்கு வரத் தேவையில்லை.

- இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் நேற்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் அனைவருக்கும் வழங்க ஜனாதிபதிக்கு வடக்கு, கிழக்கு அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

வடக்கு, கிழக்கில் அரச ஊழியர்களோ, ஜனநாயகம் விரும்பும் அரசியல் கட்சிகளோ நாசகார சக்திகளுக்கு பயப்படத் தேவையில்லை.

மத்திய அரசின் மூலமும் வெளிநாடுகள் மூலமும், எமது பகுதிகளின் புனரமைப்புக்கு என நாம் பெற்ற நிதி ஆறு மாத காலத்தினுள் உரிய திட்டங்களுக்கு என செலவிடப்பட வேண்டும். இல்லையேல் இந்த நிதியைத் திசை திருப்பி விடப் போவதாக உதவி வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன.

இதை தமிழ் அரச ஊழியர்கள் உணர்ந்து பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அரசஅலுவலகங்கள் இயங்க வேண்டியதன் அவசியத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியரைக் கடமைக்கு திரும்புமாறு இறுதிக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

சகல அரசாங்க ஊழியர்களையும் உடனடியாக அவரவர் வேலைக்குத் திரும்புமாறு யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் கேட்டுள்ளார்.

இது அரச ஊழியர்களுக்கு விடப்படும் இறுதிக் கோரிக்கை என்றும், இதனை உதாசீனம் செய்வோர் அதனால் வரும் பின் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாகத் திரு. முருகநேசன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரச அலுவலர்கள் பலர் தமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை, பல்வேறு காரணங்களைக் காட்டி வேலைக்கு வராது விடுவதன் மூலம், உதாசீனப் படுத்துவது தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாதொன்றாகும். கச்சேரி

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் சம்பளம் இம்முறையும் திணைக்களத்தில்!

யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐந்து கோட்டக் கல்வி நிலையங்களிலும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப் படாததால் இம்மாதமும் கல்வித் திணைக்களத்திலேயே ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப் படவிருக்கிறது.

சமீபத்தில் உருவாக்கப்பட்ட கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூலமாகவே ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதென ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் இக் கொட்டக்கல்வி நிலையங்களுக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்க அனுமதி கிடைக்காததால், ஆசிரியர்களின் சம்பளத்தை வழமை போல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## பஸ் சேவை மேலும் சீர்குலைவு

கொழும்பு, ஜூன் 14

கொழும்பில் நேற்று இரண்டாவது நாளாக பஸ்சேவைகள் சீர்குலைந்திருந்தன.

முதல்நாளைவிட இரண்டாம் நாளான நேற்று மிகக் குறைந்த அளவு பஸ்களே சேவையில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## வட, கிழக்கு மாணவருக்கு பொதுப்பரீட்சை டிசம்பரில்

யாழ்ப்பாணம், ஜூன் 14

முதற்தடவையாக வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களுக்கு பொதுப் பரீட்சை நடத்தப்படவிருக்கிற .

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சால் இப் பொதுப் பரீட்சை நடத்தப்படவிருக்கிறது.

ஆண்டு 9, 10, 11 ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் மூன்றாந் தவணைப் பரீட்சையே பொதுப் பரீட்சையாக நடத்தப்படவிருக்கிறது.

இப்பரீட்சை டிசம்பர்மாதம் நடைபெறும்

ஏனைய மாணவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் மாவட்டக் கல்வித்திணைக்களத்தால் பொதுப்பரீட்சை நடத்தப்படும்.

இதே நேரம் 2ம் தவணைப் பரீட்சைகள் கோட்டக்கல்வி மட்டத்தில் நடைபெறவிருக்கின்றன. ஆண்டு 4 முதல் 11 வரையுள்ள மாணவர்களுக்கு பொதுப் பரீட்சை நடைபெறும். ஆண்டு 6 முதல் 11

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கல்முனையில் அமைதி நிலை; அலுவல்கள் வழமை போல்

கல்முனை, ஜூன் 14

கல்முனையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக மூடப்பட்டிருந்த அரச அலுவலகங்கள் அனைத்தும் இயங்கத் துவங்கியுள்ளன. தற்போது கல்முனை, சம்மாந்துறைப் பகுதிகளில் அமைதி நிலை ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணமாகும்.

தடைப்பட்டிருந்த போக்குவரத்துக்களும் தற்போது நடைபெறுகின்றன. கல்முனை-அக்கரைப்பற்று, கல்முனை-பொத்துவில் பஸ் சேவைகளும், கல்முனை - அம்பாறை பஸ் சேவையும் சம்மாந்துறை ஊடாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு பஸ்ஸிலும் இந்தியப்படையினரும், இலங்கைப் பொலீஸாரும் பாதுகாப்புக்காகச் செல்கின்றனர்.

கடந்த காலங்களில் ஆட்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் இந்தியப்படையினர் தீவிரமாக காவல் புரிகின்றனர்.

கல்முனை நகரில் கடைகள் யாவும் திறக்கப்பட்டு வியாபாரமும் நடைபெறுகின்றன. தபால்சேவைகளும் தற்போது தடையின்றி நடைபெறுகின்றன. (ஒ-84

### சுபநேரம்

14—06—1989
வைகாசி—32
புதன்கிழமை
சுபநேரம்:
04 23 முதல் 05.53 வரை
ராகுகாலம்:
11.53 முதல் 01.23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஹோட்டல்களில் தங்க இந்தியருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 14

இந்தியர்களை கொழும்பில் உள்ள ஹோட்டல்களில் தங்கி இருக்கும்படி இந்தியத் தூதரகம் அறிவுறுத்தி இருப்பதாக நேற்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஜே.வி.பியினர் இறங்கக் கூடும் என்ற அச்சத்திலேயே முன்னேற்பாடாக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஜே. வி. பியினர் இன்று புதன்கிழமை முதல் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. [ஓ-எ]

## இந்திய வங்கிக்குள் புகுந்து சுலோகம் எழுப்பிய நபர்!

கொழும்பில் உள்ள ஸ்டேட் பாங்க் ஒப் இண்டியா' அலுவலகத்துக்குள் ஒருவர் திடீர் என்று புகுந்து இந்திய எதிர்ப்புச் சுலோகங்களை கோஷித்தார்.

கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த வங்கி அலுவலகம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து சிலயார் தூரத்தில் உள்ளது. [உ-எ]

இளைய தலைமுறையின் இதயக்கனவாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

பொமனேறியன் தூய இன எட்டுவார வயதுடைய குட்டிகள் பால்குடி மறக்கப்பட்டு பூச்சி மருந்து கொடுக்கப்பட்டவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முதலியார் வளவு. கனகசபை றோட், மானிப்பாய். (765)

Chaly (New Model ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 45 இராசாவின் தோட்டம் றோட் (ரயில்வே கடவைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (11248)

Honda Reconditioned புதிய Model C 90, C 50 CD 50, MD 90 Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Anton Enterprises, 390 மெயின் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (11249)

இறக்குமதி ாக இருக்கும் [Holland Ornk] விதை உருளைக்கிழங்குதேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம். [753]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [756]

நல்ல நிலையிலுள்ள Yamaha Electric 125 Moter Cycle விற்பனைக்கு உண்டு. 14ஆம் 15ஆம் திகதிகளில் பார்வையிடலாம். 12/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (758)

### விற்பனையாகின்றது

புதிய தமிழ்மொழிப் பயிற்சி ஆண்டு 5 புலமைப்பரிசில் விசேட சித்திக்கு வழிகாட்டி வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (767)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

### Nallur Farm Centre

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை,சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற் குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம் C/o நல்லூர் விடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/2796)

### புறொயிலர் குஞ்சு விநியோகம்

Bairaha Farm புறொயிலர் குஞ்சு 15ஆம் திகதி வியாழக்கிழமை Christombu Farm பிறவுண் சேவற் குஞ்சுகள் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [755]

### தேவை

மோட்டார் றீவைண்டிங் எயர்கொண்டிஷன் வேலைபழக விரும்புபவர்கள் பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் பயிற்சிக் காலத்தில் சம்பளமும் வழங்கப்படும். நேரில் வரவும். ''ஒமேகா'' மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் (763)

### மணமகள் தேவை

யாழ். வேளாள றோமன் கத்தோலிக்க இலங்கையில் B. Sc. பட்டம்பெற்ற U. K யில் எக்கவுண்டனுகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகுள்ள படித்த மணமகள் தேவை. தொடர்பு 'A B C D E' 328 நாவலர் றோட், ஆனைப்பந்தி. (762)

### தவறிவிட்டது

கதிர்காமு சின்னத்துரை ஆயிலி காரைநகர் அடையாளஅட்டை தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி ஏசியன் ரெக்ஸ்ரையில் பலாலிறோட், திருநெல்வேலியிலோ ஒப்படைக்கவும். [761]

சண்டிலிப்பாய் மத்தி, சொர்ணவடிவேல் மங்கையற்கரசி ஆகிய எனது அடையாள அட்டை இல. 538051659V இலங்கை வங்கிக்குமுன் தவறிவிட்டது. கண்டு எடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (764)

### Spoken English

புதியபிரிவு ஆரம்பம் 15-6-89 செவ்வாய், வியாழன் நாட்களில். நேரம் பிற்பகல் 3.30 - 5.00 S.B. Iyar, 12, வைமன் வீதி நல்லூர். [11224]

### புலமைப்பரிசில் பரீட்சை

5ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 18-06-89 ஞாயிற்றுக்கிழமை 3.00 மணிக்கு நடைபெறும். மேற்படி பரீட்சை சம்பந்தமான வினு விடை வகுப்பு சனி, ஞாயிறு 10.30 மணிக்கும் புதன் 3.30 மணிக்கும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (766)

---

வெற்றுச்சாக்கு

## கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 3000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ரூ. 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப்பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப்பணமாக ரூ. 500/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திரம்'' எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். சாக்குகளை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21-06-1989**

பொதுமுகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்.

(2838)

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 6000 சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 28-06-1989**

விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 26-6-89 வரை பெற்றுக் கொள்ளலாம்

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
திருநெல்வேலி.

(சி/2702)

---

## ★ கம்ப்யூட்டர் கல்வி ★

**Data Processing & Computer Programming in Basic Language**

**காலம்: 2 மாதம் ஆரம்பம்:** 23-6-89 (Week days) 24-6-89 (Week end)

சேரும் போது செலுத்த வேண்டியது 450/- மட்டுமே

O/L படித்த இருபாலாரும் சேரலாம். IBM - Epson PC JI Computerஇல் கூடிய நேர செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். ஒவ்வொரு மாணவ மாணவியரும் தனிப்பட்ட கவனம் பெறுவர். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

ABLE

## ABLE TECHNICAL STUDIES

post Office RD,
Chavakachcheri.
(SCIENCE CENTRE)

K.K.S. Road,
Jaffna.
(இந்துக்கல்லூரிக்கு அருகில்)

[சி/2846]

---

## Diploma in Computer Programming & Data Processing

| | Basic | d. Basc III + |
|---|---|---|
| Duration | 4 Months | 2 Months |
| Commencement | 23-6-89 | 27-6-89 |
| Days | Tue, Fri | Tue, Fri |
| Time | 8.30 - 10.30 | 10.30 - 12.30 |
| Monthly Fees | 300/- | 600/- |

★ Practicals on I. B. M (Compatibles)
★ More Practical Time
★ Lectures by Members of I. D. P. M (London)
★ தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்.
★ Valuable Certificate

**Knowledge is Power**

C.I.M.A, I.D.P.M, I.A.B.
வகுப்புகள் இப்பொழுது தான் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெறுகின்றன.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd Cross Street
(OLR தேவாலய மேற்குப்பக்கம்)
JAFFNA.

(சி-2845)


# யாழ் - காங்கேசன் ரயில் பாதை புனரமைப்புக்கு ரூபா $2\frac{1}{2}$ கோடி

## ரயில் நிலையங்களும் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 14
யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை ரயில் பாதையை புனரமைப்பதற்கென போக்குவரத்து அமைச்சு 2 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேவேளை இப்பாதையில் உள்ள முக்கிய ரயில் நிலையங்களைத் திருத்துவதற்கும் போக்குவரத்து அமைச்சு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை ரயில் பாதை திருத்த வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இவற்றுக்கு தேவையான தண்டவாளங்களும் சிலீப்பர் கட்டைகளும் ரயில் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

திருத்த வேலைகள் யாழ். பல்கலைக்கழகம் வரை பூர்த்தி அடைந்துள்ளன என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

# முதலில் நாவல்களை எழுதிய பின்பு சிறுகதைக்கு வருவது நல்லது

## சிறுகதை இலக்கியப் பட்டறையில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 14
'எழுதுவதை நாம் ஒரு தொழிலாகக் கொள்ளலாம். ஒரு நாவல் எழுதுவதை விட சிறுகதை எழுதுவது கஷ்டம். ஆரம்பத்தில் வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் முதலிரு நாவல்கள் எழுதி பின்னர் சிறுகதைகளை எழுதுவது நல்லது. சிறுகதைகளில் ஒரே உத்தியைத் திரும்பத் திரும்ப உபயோகிக்ககாது வித்தியாசமான உத்தியை உபயோகிக்க வேண்டும்.'

'மகவம்' மதி அக்கடமியுடன் இணைந்து ஊரெழுவில் நடத்திய இலக்கியப்பட்டறையில் 'சிறு கதை இலக்கியம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் திருமதி கோகிலா மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

'மகவம்' தலைவரும் அதிபருமான திரு வேல் அமிர்தன் பட்டறைக்குத் தலைமை வகித்தார்.

திருமதி கோகிலா மகேந்திரன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது; சிறு கதையில் எழுத்தாளன் வாசகர்களுக்கு எதனைச் சொல்ல வருகிறுன் என்பது தெளிவாக இருக்க வேண்டும். எழுத்தாளனுவதற்கு நிறைய நூல்களை வாசிக்க வேண்டும்.

ஒருவர் எழுதிய சிறு கதையின் விமர்சனத்தை விமர்சகர்கள் மூலம் கேட்டு அடுத்தடுத்த சிறுகதைகளை எழுதும் போது விமர்ச்சிக்கப் பட்டவற்றை கருத்தில் கொண்டு எழுத வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

திரு. வேல் அமிர்தன் தமது தலைமை உரையில் 'பல்கலைக் கழகத்துக்கு மட்டு மாணவர்களைத் தயார் செய்யாது அவர்களின் திறமைகளுக்கேற்ப தொழில்துறைகளிலும் போதிய பயிற்சி அளிக்கவே மாதா மாதம் பட்டறைகளைச் செய்முறை விளக்கத்துடன் நடத்தவுள்ளோம்; அதில் 'சிறுகதை எழுதல்' பற்றிய பட்டறை ஆரம்பமாகி உள்ளது' எனக் கூறினர்.

பட்டறை ஆரம்பமாவதற்கு முன்னர் அறிஞர் தேவனுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. [ச]

கைலாசபதி கலையரங்கில்

## புவியியலாளன் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணப் புவியியலாளன் வெளியீட்டு விழா இன்று புதன் மாலை மூன்று மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

புவியியற் கழகத் தலைவர் திரு. கே. தர்மலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் அறிமுகவுரையும், கலைப்பீடாதிபேராசிரியர் என் பாலகிருஷ்ணனின் வெளியீட்டுரையும், கலாநிதி வி. நித்தியானந்தன் கலாநிதி சபா. ஜெயராசா ஆகியோரின் ஆய்வுரையும் இடம் பெறும்

முதற்பிரதிகளை வைத்திய கலாநாதி வி. கிருஷ்ணராசா திரு. எஸ். கனகலிங்கம் ஆகியோர் பெறுவார்கள்


## விஜய லங்கா எக்ஸ்போட்ஸ் கம்பனி

பருத்தித்துறைவீதி,
கோப்பாய்.

எம்மிடம் பின்வரும் பொருட்கள் சில்லறை விலைக்கு விற்பனைக்கு உண்டு

1. S. P 180 நாஷனல் - ரூபா 169/50
2. TDK- D90N - ரூபா 44/50
3, போட்டோஸ்ரட் பேப்பர் (கின்யோ யப்பான்)

70 GM.S

| | | | |
|---|---|---|---|
| B5 | 165.00 | A4 | 200.00 |
| F4 | 220.00 | LEGAL | 230.00 |
| B.4 | 280.00 | A.3 | 350.00 |

சன்யோ கஸட்டுக்கள் TDK 60N

அடுத்த சொற்ப நாட்களில் சில்லறை விலைக்கு கிடைக்கும்

(923)

---

**When You Want to Open the Right Doors in Sri Lanka**

Remember

## SHABRA

We have proved **S**tability
We have shown **H**onesty
We are very much **A**dvanced
We have the most **B**acking
We are so **R**eliable
Thats why we are on the move **A**head

50

**Shabra Unico Finance Limited**
207, Power House Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார பரவலாக்கலால் பாடசாலையின் தேவை பூர்த்தி

### கட்டடத் திறப்பு விழாவில் உரை

சாவகச்சேரி, ஜூன் 14

அதிகாரம் பரவலாக்கப்படுவதால் பாடசாலைகளின் தேவைகள் நன்கு கவனிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. திட்டமிடல், மேற்பார்வை, சேவைவழங்கல் ஆகிய மூன்று அம்சங்கள் இதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சேவைகளை பூரணமாக நிறைவேற்ற அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் ஆகும்.

இவ்வாறு யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கூறினார்.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிவாகம ஞான சாகரம் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் ஆசி உரை வழங்கினர்.

வித்தியாலயஅதிபர் திருமதி தாமோதரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

செல்வி பெரியதம்பி தொடர்ந்து பேசுகையில் சாவகச்சேரியில் உள்ள ஒரே ஒரு மகளிர் வித்தியாலயம் இதுவாகும். இதன் தேவைகள் கவனிக்கப்பட வேண்டும். பாடசாலையில் சிறப்பு பழக்கங்கள் ஒழுக்கம் ஆகியவை மாணவர்களிடையே நிலை பெற வேண்டும். இவ்வித்தியாலயத்தில் இதை அவதானிக்க முடிகிறது.

இப்படி அவர் கூறினார்.

சாவகச்சேரி கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன், நகராட்சி மன்றச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோரும் உரையாற்றினர். [ச-31]

## ரிசேர்வ் பொலீஸ் தெரிவில் தமிழர்கள் புறக்கணிப்பு!

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

மட்டக்களப்பு, ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் தெரிவில் தமிழர்கள் புறக்கணிக்கப் ட்டுள்ளார்கள்

இம்மாவட்டத்தால் 840 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழர், முஸ்லிம் தலா 370 சிங்களவர் 100 என்ற எண்ணிக்கையில் தெரிவு செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் பயிற்சி வழங்கப்படுகிறது.

மாவட்ட விகிதாசாரத்தின் பிரகாரம் தமிழர்கள் 600 பேர் தெரிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சாம் தம்பிமுத்து பாதுகாப்பு துணை அமைச்சருக்குப் புகார் தெரிவிக்கும் தந்தி ஒன்றைத் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு பிரிவுக்கு 250 கான்ஸ்டபிள்களும், வாழைச்சேனைக்கு 150 பேரும், ஏறுவூருக்கு 100 பேரும், கல்குடாவுக்கு 90 பேரும் களுவாஞ்சிக்குடிக்கு 150 பேரும், வெல்லாவெளிக்கு 100 பேரும் என்ற அடிப்படையில் ரிசேர்வ் பொலீசார் நியமிக்கப்படுவர்.

இத்தகவலை உதவி பொலீஸ் அத்தியட்சகர் திரு. எஸ். தேனபடுவ செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஓ-ச-21)

## 400 மீட்டர் போட்டி

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக 400 மீற்றர் சுவட்டில் மெய்வல்லுனர் போட்டிக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

உருத்திரபுர மகாவித்தியாலயத்துக்காக அமைக்கப்பட்டுள்ள புதிய மைதானத்திலேயே 400 மீற்றர் சுவடு போடப்பட்டுள்ளது. (க - 76)

## பரு.-மூளாய் பஸ்சேவை

கரவெட்டி, ஜூன் 14

நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த பருத்தித்துறை மூளாய் பஸ்சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. (க-70)

# எனது ஆலோசனைக்குச் சாதகமாக ராஜீவ் நடந்திருந்தால் பிரேமாவின் கோரிக்கைக்கு இடமிருக்காது —கருணாநிதி

திருச்சி, ஜூன் 14

எனது ஆலோசனைக்குச் சாதகமாக பிரதமர் ராஜீவ்காந்தி நடந்திருந்தால், பிரேமதாச இப்போது விடுத்திருக்கும்



பிரேமதாஸா

கோரிக்கை வந்திருக்காது.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. மு கருணாநிதி கருத்துத் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படையை விலக்கிக்கொள்ளும் பிரச்சினை குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி, திருச்சியில் வைத்து கருத்து வெளியிட்டார். அப்போது அவர் சொன்னதாவது:-

தனித்தமிழீழம் கோரிக்கையை ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் விடுத்துள்ளது.



ராஜீவ்

இதை இந்தியா ஆதரிக்காத பட்சத்தில் இலங்கையில் இருந்து அமைதிப்படையை விலக்கிக் கொள்வதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியே இல்லை.

சகல தமிழர் அமைப்புக்கள், இந்திய மற்றும் இலங்கை அரசுகள் அனைத்தையும் அழைத்துப் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்ற எனது ஆலோசனைக்கு சாதகமாக பிரதமர் ராஜீவ்காந்தி நடந்திருந்தால் அமைதிப்படையை விலக்கிக்கொள்ளும்படி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா கோரிக்கை விடும் நிலையோ அல்லது தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு பேச்சு நடத்தும் நிலையோ ஏற்பட்டிருக்காது

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களைப் பாதுகாக்கும்படி தி. மு. க. இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. அது சரித்திரம்.

அப்பாவித் தமிழர்கள். போராளிகள் மற்றும் அமைதிப்படையினர் உயிரிழப்பது கவலை தருகிறது.

### பிரதமரின் மனதை மாற்றினர்

முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடன் நான் முதலில் செய்தது புதுடில்லி சென்று பிரதமர் காந்தியைச் சந்தித்தி இலங்கைப் பிரச்சினை குறித்து எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்ததுதான்.

அனைத்துத் தரப்பினரையும் ஒன்றாகக் கூட்டி பேசி நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்ற எனது யோசனைக்கு பிரதமர் சாதகமாக இருந்தார்.

சில அதிகாரிகளும் தமிழ் நாட்டில் உள்ள சில அரசியல்



கருணாநிதி

கட்சிகளும்தான் இதற்கு எதிராக பிரதமரின் மனதை மாற்றினர் இப்படி முதலமைச்சர் கருணாநிதி சொன்னார்; [அ-எ]

## அமரனின் சாதனை

நாயன்மார்கட்டைச் சேர்ந்த செல்வன் அமரன் சரவணமுத்து, அகில இலங்கை வேதாகமப் போட்டியில் மிகச் சிறந்த சாதனை படைத்த போட்டியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரை உள்ளடக்கிய நல்லூர் பரி.யாக்கோப்பு ஆலயக் குழுவினர், கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தையும், சிரேஷ்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# நட்பை வளர்ப்போம்




# பிறிஸ்டல்

## சுவையைப் பகிர்ந்துகொள்வோம்

விலை
10 ரூபா 13.00
20 ரூபா 26.00

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடித்தல் சுவாசப்பைக்குத் தீங்காகலாம்

JWT CTC 2697


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதிப் பாடசாலைகளிடையே

## உதைபந்தாட்ட - வலைப்பந்தாட்டப் போட்டிகள்

### புங்குடுதீவில சனிக்கிழமை நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 14

தீவுப்பகுதி பாடசாலை மாணவரிடையே எதிர்வரும் 17-ஆம் திகதி சனிக்கிழமை உதைபந்தாட்ட - வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற உள்ளன.

புங்குடுதீவு விளையாட்டுச் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் போட்டிகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

7 பேர் கொண்ட 19 வயது, 17 வயது பிரிவுகளில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெறும்.

19 வயதுப் பிரிவினரின் வலைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் முதல் இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. க. துரைசிங்கத்தால் வழங்கப்பட்ட அமரர் வைத்திய கலாநிதி வீரவாகு தம்பிராசா (தம்பையா) ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.

இரண்டாவது இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு புங்குடுதீவைச் சேர்ந்த கைலாயநாதன் விமலதாசனால் வழங்கப்பட்ட அமரர் ஐயாத்துரை இராதாகிருஸ்ணன் [இராதா] ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் வழங்கப்படும்.

இச்சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு புங்குடுதீவு விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. த. தங்கராசா ஆசிரியரால் வழங்கப்பட்ட அமரர் அதிபர் வேலுப்பிள்ளை கதிர்காமர் [செல்லத்தம்பி] ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு புங்குடுதீவு கமலா வைத்தியசாலை உரிமையாளர் டாக்டர் சி. கணேசுவால் வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

19 வயது வலைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு மண்டைதீவு மகா வித்தியாலய ஆசிரியர் திரு. பொ. சபாரெத்தினத்தால் வழங்கப்பட்ட அமரர் திருமதி பொன்னையா ஆச்சிமுத்து ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.

இரண்டாம் இடத்தைப் பெறும் பாடசாலைக் குழுவுக்கு புங்குடுதீவு திருமதி நடராசா புவனேஸ்வரியால் வழங்கப்பட்ட அமரர் செல்வி நடராஜா கலைச்செல்வி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும். [இ-க]

## அங்குரார்ப்பண கூட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முல்லைத்தீவு இந்து வித்தியாலய மண்டபத்தில் முல்லை. உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெறும். (இ-92)

---

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**தி. பரதராஜன் (மொறிஸ்)**

**மண்ணில் மலர்வு:** 12-09-1969 **மண்ணில் உதிர்வு:** 01-05-1989

கடந்த 02-05-1989இல் நடைபெற்ற அன்னாரின் மரணச்சடங்கில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு, குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்கி, உதவிகள் புரிந்த அனைத்து அன்பு மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

14-06-1989 புதன்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
14-06-1989 (917)

---

## 163 ஆம் நாள் நினைவஞ்சலி
(6 ஆம் மாதம்)



செல்வன்
**கணேசலிங்கம் ஜீவகுமார் (ஜீவன்)**

தோற்றம்: 28 - 03 - 1971 மறைவு; 03 - 01 - 1989

**திதி: ஏகாதசி 14 - 06 - 1989**

தந்தையினால் உயிர் கொடுத்திட்ட ஜீவன்
தாயினால் கருவிலிருந்து உற்பவித்த ஜீவன்
உற்றோரால் உவந்தேற்றிப் போற்றிநின்ற ஜீவன்
மற்றோரால் கவர்ந்தேற்றுக் களித்து நின்ற ஜீவன்
பார்க்குமிட மெங்கும் நீக்கமற நின்று
பார்முழுதும் சுற்றி வலம் வந்து
பார்ப்பவர்கள் மகிழ்ந்திடவே சிரித்து நின்று
பால் வடியும் வதனத்தைக் காட்டி நின்று
அண்டமெலாம் புரக்கின்ற கதிரவன் போல
அகிலமெலாம் காத்துநின்ற இளம் பரிதி ஐயா - நீ
அண்டினோரை அன்புடனே ஆதரித்த உன்னை
அவசரமாய் ஆண்டவன் தம்பக்கம் அழைத்ததேனோ

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் 14 - 06 - 89 புதன்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியை வைபவத்தில் பங்கு பற்றுவதோடு அன்னாரின் ஆத்ம ஈடேற்றப் பூசைகளிலும் பங்குபற்றி மதிய போசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நினைவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தங்கை,
உற்றார், உறவினர்.

''செல்வகிரி''
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். [913]

---

# நாவாந்துறை சென். மேரீஸுக்கு மீனவர் ஞாபகார்த்தக்கிண்ணம்

யாழ்ப்பாணம் ஜூன் 14

மண்டைதீவில் அமரத்துவம் அடைந்த 31 மீனவர்களின் ஞாபகார்த்தமாக 'ஏ' பிரிவில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

குருநகர் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

சென். மேரீஸ் விளையாட்டுக்கழகத்துடன் யாழ். முஸ்லீம் அணி மோதியது.

பாடும் மீன் விளையாட்டுக் கழக அனுசரணையுடன் குருநகர் புனித சூசையப்பர்விளையாட்டுக் கழகம் நடத்திய போட்டி ஆரம்பத்திலிருந்தே விறுவிறுப்பூட்டும் வைபவமாக அமைந்திருந்தது.

போட்டி ஆரம்பித்த சில நிமிடங்களில் யாழ். முஸ்லிம் அணி வீரர் கே. அஸ்கர் தமது அணிக்கான கோலைப் போட்டார்.


பின்னர் இதனை ஈடுசெய்யும் வகையில் சென் மேரீஸ் வீரர் ஆரோக்கியதாசன் ஒரு கோலைப் போட்டார்.

இறுதி நிமிடங்கள் வரை 1:1 என்ற கோல்களே பெறப்பட்டிருந்தன. எனவே மேலதிக நேரம் வழங்கப்படுமா என ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த வேளையில் சென். மேரீஸ் அணி வீரர் ராசா' போட்டி முடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் மற்றும் ஒரு கோலைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இப்போட்டியின் சிறந்த வீரராக யாழ். முஸ்லீம் அணியைச் சேர்ந்த எம். எஸ். சலீம் தெரிந்தெடுக்கப்பட்டார்.

போட்டிக்கு விமலதாசன் அந்தோணிப்பிள்ளை செபஸ்டியம்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இறுதிப் போட்டிக்குமுன்னதாக நடைபெற்ற காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி தெரிவுக் கோஷ்டியை எதிர்த்து ஆடிய குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 0;1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. இப்போட்டிகளுக்குப்பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட குருநகர் பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய இமானுவல் அடிகளார்வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கினார். (இ-6)



நாவாந்துறை சென் மேரிஸ் அணி தட்டிக் கொண்ட மீனவர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைப் படத்தில் காணலாம். மண்டை திவுக்கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் படு கொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் ஞாபகார்த்தமாக இந்தப்போட்டி நடத்தப்பட்டு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

---

## 65 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**திரு: வர்ணகுலசிங்கம் கலைஞானசிங்கம்**

மண்ணிற்கு: 17 - 04 - 1956 விண்ணிற்கு 10 - 04 - 1989

அன்பின் திருவுருவே அறிவின் பிறப்பிடமே
பண்பின் உறைவிடமே பாசத்தின் சிகரமே எம்
அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து
அறுபத்தைந்து நாட்கள் உருண்டு ஓடினாலும்
உங்கள் திருவுருவம் எம்மை விட்டு என்றும் அகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லை முருகனை வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி தியாகேஸ்வரி, மாமி
மச்சான் மச்சான்மார்.
(நல்லூர்) சகோதரன் வ. இராம்

156, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், [11239]

---

## கூட்டுவழிபாடு

சுழிபுரம், ஜூன் 14

காட்டுப்புலம் சிறுவர்கள் சமய வளர்ச்சிக்காக வாரம் தோறும் கூட்டு வழிபாடு நடத்தி பரிசு வழங்கும் ஓர் ஏற்பாட்டை இம்மாதக் கடைசியில் நடைமுறைப்படுத்த பஜனைச் சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க - 28)

## சர்வோதயப் பாலர்பாடசாலை

பருத்தித்துறை, ஜூன் 14

கெருடாவில் தெற்கு கலையரசி சன சமூக நிலையத்தின் முயற்சியினால் இப்பகுதியில் சர்வோதய பாலர் பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. [க - 118]

## பணிப்பாளர்

கரவெட்டி, ஜூன் 14

கிளிநொச்சி மாவட்ட புனர் வாழ்வு புனருத்தாரணப் பணிப்பாளராக செல்வந்திநாதக் குருக்கள் சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு: சுவாமிநாதன் கிளிநொச்சி மவட்ட திட்ட மிடல் பணிமனையின் பொறுப்பாளராகப் பணி புரிந்தார். [க - 70]

---

## 10 ஆம் வருட நினைவஞ்சலி

அமரர் உயர் திரு
**இளையதம்பி இராஜரட்ணம்**
(இந்துபோர்ட் இராஜரட்ணம் [மைத்துனர்]
முன்னை நாள் தபாலதிபர் இரட்மலானை)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாக திகழ்ந்த எங்கள் அன்புந் தந்தையே பாசத்தின் ஒளியாகி எங்கள் உள்ளத்தில் அணையா ஜோதியாக விளங்கும் உமது திருவடிக்காக எங்கள் இதய அஞ்சலி

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

சேச் லேன்,
கொக்குவில். [11246]

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்: 12 - 09 - 1936

மறைவு: 14 - 05 - 1989

**திரு. C. D. பத்மநாதன்**


தந்தாய் உமது அன்புப் பராமரிப்பில் இவரை நித்தியத்திற்கும் காத்தருளும். ஆமென்.

மனைவி, மகன், மகள்.

37, குமாரகோவிலடி,
காங்கேசன்துறை. [11238]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. சுவாமிநாதன் கனகரத்தினம்**
[வசந்த பவான் உரிமையாளர் கொடிகாமம்]

**அன்னையின் மடியில்:** 1958-10-16 **ஆண்டவன் அடியில்:** 1989-05-15

பிறப்புண்டேல் இறப்புமுண்டு - இது
இயற்கையின் நியதி - என்றாலும்
விளையும் பயிரை முளையில் கிள்ளி - சென்ற
விதியவனே எம் நிலை உனக்கு - விளங்கவில்லையோ?
உனக்கும் இது விதியோ
இறைவன் இணங்கிய சதியோ

உங்கள் ஆன்மா ஈடேற்றத்துக்காய் எம் மனம் கனிந்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

14-06-1989 ஆம் திகதி இன்று புதன்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், நண்பர்கள்,
உற்றார், உறவினர்கள்.

எருவன் கொடிகாமம்,
அருள்நாயகி புத்தகசாலை,
கொடிகாமம். [சி/2700]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு - போயா தினங்களில்

# நோயாளரைப் பார்வையிடும் நேரம் மட்டுப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 14 ஞாயிறு போயா விடுமுறை தினங்களில் யாழ் ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களும், கர்ப்பிணிகளும், வார்ட்டில் சேர்க்கப்படவேண்டிய நிலையில் உள்ள நோயாளர்களுமே பார்வையிடப்படுவர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதன் காரணமாக இந்த நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-10]


## வீடு, வளவுகள் விற்பனைக்கு

1. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வீதியில் தொழிற்சாலை நடத்திய காணி பரப்பு 10 குளி 12 சுற்றுமதில் கட்டிடம், குழாய்க்கிணறு, 1300 கன்று கமச்செய்கைத் தறையுடன்.
2. சூராவத்தை அம்மன் கோயிலுக்குக்கிட்ட பரப்பு 7
3. சூராவத்தையில் பரப்பு 3 வீட்டுடன்.
4. புதிய ஒற்றைக் கரத்தை வண்டில்.

தொடர்பு கொள்க:

**R. E. யோசேப்**
குமாரசுவாமிப்-புலவர் வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் நீர்ப்பாசனக் கிணற்றுக்கு அருகில்) [915]



## வேலைவாய்ப்பு-லிபியா

1. Architectural Draughtsman
   சம்பளம்: US $ 400
2. மேசன்
   சம்பளம்: ரூ. 9500.00

வயது 20 — 40; 2 வருட ஒப்பந்தம். லீவு, இன்சூரன்ஸ் ஓவர்ரைம் லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம், மெடிக்கல், உணவு வசதி (Mess Facility,) இனம்.

மிக அவசரமாக ஆட்கள் தேவைப்படுவதினால் தயவு செய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களுடன் உடனடியாக

18. 06. 89 க்கு முன் வரவும்.

**இந்திராணி ஏஜென்ஸி,**
பருத்தித்துறை வீதி,
(சேவிஸ் ரேசனுக்கு முன்னால்)
நெல்லியடி.
Licence No: 616 [சி 2836]



## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### ★ சவூதி அரேபியா ★

| | | |
|---|---|---|
| 1. | எலக்ரோனிக் ரெக்னீசியன் | — 800 SR |
| 2. | ஜெனரேட்டர் ஒப்பரேற்றர் | — 650 SR |
| 3. | எலக்ரீசியன் | — 650 SR |
| 4. | A/C ரெக்னீசியன் | — 700 SR |
| 5. | போட்டோகொப்பி/ரைப்ரைட்டர் ரெக்னீசியன் | — 800 SR |
| 6. | கார் பெயின்ரர் | — 550 SR |
| 7. | பிளம்பர் | 550 SR |
| 8. | லேபர் சுப்பவைசர் | — 500 SR |
| 9. | வால் பெயின்ரர் (Wall Painter) | — 500 SR |
| 10. | பெஸ்ட் கொன்ரோல்ட் ஒப்பரேற்றர் | — 500 SR |
| 11. | ரெலெக்ஸ் ஒப்பரேற்றர் | — 600 SR |
| 12. | டீசல் மெக்கானிக் | — 700 RS |
| 13. | பெற்ரோல் மெக்கானிக் | — 700 SR |
| 14. | கெவி ரைவர் (Heavy Driver) | — 500 SR |
| 15. | இக்கியூப்மன் ஒப்பரேற்றர் | — 500 SR |
| 16. | லேபரேஸ் | — 300 SR |
| 17. | எலக்ரோனிக் ரெக்னீசியன் | — 800 SR |
| 18. | H. V எலக்ரீசியன் | — 550 SR |
| 19. | லேத் ஒப்பறேற்றர் | — 550 SR |
| 20. | வாட்டர் ரீட்மன் ஒப்பரேட்டர் | — 550 SR |
| 21. | ஒட்டோ எலக்ரீசியன் | — 700 SR |

உடன் தொடர்பு கொள்ளவும்:

**அ. தவச்செல்வம், B. Sc (Hons)**
ஆசிரியர்,
நெல்லியான் வீதி.
சுளிபுரம்.
சி[2842]


## ஜனாதிபதிக்கு பிறந்த நாள் பரிசு

ஜூன் 23 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாசவின் பிறந்த நாளை முன்னிட்டு ஜனாதிபதிக்கு 1 லட்சம் ரூபாவுக்குமேலான பணம் பரிசாகச் சேர்ந்துள்ளது.

இந்தப் பணம் ஜனாதிபதியின் செவனசரண தாபரிப்பு-பெற்றோர் நிதிக்கு வழங்கப்படும்.

ஜனாதிபதி தமது பிறந்த நாளுக்கு வாழ்த்துக்களையும், தந்திகளையும் அனுப்ப வேண்டாம் என்றும் அவற்றுக்கான பணத்தை அனுப்பி வைக்கும் படியும் கேட்டதை அடுத்தே இந்தப் பணம் சேர்ந்துள்ளது.

# ஆன்மீக ஒழுக்கப் பண்பு வளர விளையாட்டுப் போட்டி அவசியம்

## குருநகர் கொத்தணி அதிபர் பேச்சு

''ஆரோக்கியம் உடைய கட்டுப்பாடான மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கும் சமூகத்திற்கும் உரியதாகும்.''

குருநகர், கொத்தணி பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றமெய்வல்லுநர்போட்டி பரிசளிப்பு வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய கொத்தணி அதிபர் திரு. ஜீ. பீ. அல்பிரட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போட்டிகள் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

திரு. ஜீ. பீ. அல்பிரட் தொடர்ந்து பேசுகையில்:

''மாணவர்கள் மத்தியில் ஆரோக்கியம், ஒழுக்கம், ஆத்மீகம் ஆகிய மூன்று அம்சங்களையும் வளர்ப்பதற்கு இத்தகைய விளையாட்டுப் போட்டிகள்அவசியமானது' என்றார்.

யாழ் கோட்டக்கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தன் பிரதம விருந்தினருரையில்: ''யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளை நான்கு கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குருநகர் கொத்தணிப் பாடசாலைகளில் மிகக் கூடுதலான பிள்ளைகள் பயில்கிறார்கள்.

புதிய கல்விக்கொள்கைக்கு அமைய கொத்தணி, கோட்டக் கல்வி முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. கொத்தணி அமைப்பின் நன்மைகளைகாலப்போக்கில்மாணவர்கள் பெற இருக்கிறார்கள் என்றார்.

பரிசில்களை பாடசாலை மாணவத் தலைவர்கள் பிரதம விருந்தினரிடம் பெற்றனர்.

இறுதியாக திரு. ஆர். ஈஸ்வரமூர்த்தி நன்றி தெரிவித்தார். [க-51)

# சமய பாரம்பரியம் பேணுவதில் பாடசாலைகளின் பங்கு முக்கியம்

## நிறுவனர் நினைவு நாள் வைபவத்தில் உரை

காங்கேசன்துறை, ஜூன் 14 'சமய பாரம்பரியங்கள், பண்பாடுகளைப்பேணுவதில் பாடசாலைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. மாணவர்களை சகல வழிகளிலும் சமயநெறிப்படுத்தி கல்விப் போதனையை மேற்கொண்டால் வருங்காலத்தில் சிறந்த பிரஜைகள் உருவாக வழி பிறக்கும்'

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியவர் நினைவு நாள் விழா பரிசளிப்பு விழா ஆகியவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. மகேசன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாசாலை அதிபர், திரு. ச. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், சைவப் பண்பாடுகளை, பாரம்பரியங்களை பேணிக்காக்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாசாலையை வளர்ச்சி பெறச் செய்ய தாம் முடிந்த உதவிகளை அளிப்பதாக கூறினார்.

பரிசளிப்புப் பேருரை ஆற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது;

கல்வி மாத்திரமல்ல சமய ஒழுங்கும், கட்டுப்பாடும் மாணவர் மத்தியில் நிலவுவது அத்தியாவசியமாகும். முக்கியமாக மாணவர்களது நெற்றியில் விபூதி துலங்க வேண்டும். எமது சமயத்தின் மகிமையை உலகெங்கும் வியந்து போற்றுகிறார்கள். ஆனால் நாம் அதை மறந்து வாழமுற்படுகிறோம்.

எமது நாட்டுக் கல்விமுறை சமயக் கல்விக்கு முக்கிய இடம் கொடுப்பதன் காரணமாக மற்றய நாடுகளின் கல்வி முறையிலிருந்து வேறுபட்டது. ஆகவே மாணவர்கள் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று மூன்றையும் உயிராக மதித்து நடக்க வேண்டும் என்றார்.

வங்கிமுகாமையாளர் திரு. ந. சிவபாலகணேசன் நிறுவியவர் நினைவுரை ஆற்றினார்.

தெல்லிப்பழை கொத்தணி அதிபர் திரு. என். ஸ்ரீ புஷ்பநாதன் வித்தியாசாலை முன்னாள் அதிபர் திரு. செ. சிவசுப்பிரமணியத்தின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

மற்றும் திரு. இ. சபாரத்தினம் பழைய மாணவர், திரு. சு. ஏழூர்நாயகம் ஆகியோரும் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. (இ-68)

## புனருத்தாரண வேலைகள்

கோப்பாய், ஜூன் 14 கோப்பாய் தெற்கு முத்துமாரி அம்மன் கோவில் புனருத்தாரணவேலைகள்தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பல இலட்சம் ரூபா செலவில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான நிதியை வெளிநாடுகளில் வசிக்கும் இளைஞர்கள் திரட்டி வருகின்றனர். [இ -72]

## சிறுமி மரணம்

நெடுந்தீவு, ஜூன் 14 நண்டுக்கறி சாப்பிட்ட சிறுமி மரணமானார். நெடுந்தீவு குருநகர் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

சிகிச்சைக்காக இச்சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் பயன் கிடைக்கவில்லை. (க 111)

# ஆரவாரம் இன்றிப் பணிபுரிந்த மாமனிதன் எஸ். ஆர். கனகநாயகம்

## நகைச் சுவைக் களஞ்சியமாகவும் விளங்கினார்

'தனக்குத் தானே நாயகனயிருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. உள்ளத்து நேர்மையை உலக உடன்பாட்டுக்காக அர்ப்பணம் செய்தல் கூடாது' என்பன கிரேக்க ஞானி சொக்கிறட்டிஸ் அளித்த அமுத வாக்குகள்.

இவைக்கு உதாரணமாகத் திகழ்ந்தார் என் மனத்திரையில் என்றும் உலாவிக்கொண்டிருக்கும் எனது ஆழ்ந்தஅன்புக்கும் உயர்ந்த மதிப்புக்கும்



எஸ். ஆர். கனகநாயகம்

உரிய சிரேஷ்ட வழக்கறிஞர் எஸ். ஆர். கனகநாயகம்.

யாழ்ப்பாண நகரை சுமார் ஐம்பது வருடங்களாகத் தம்முடைய நகைச்சுவை உணர்வால் குலுக்கி வந்த பெரியார் தூரதேச அவுஸ்திரேலியாவில் சத்தப்படாது மறைந்த செய்தி பல்லாயிரக்கணக்கான இவ்வூர் மக்களுக்கு ஆறுத துயரமாகும்; எதிர்பாராத ஏமாற்றமுங்கூட.

சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கம்பீர தோற்றமுள்ள வாலிபனை பேரறிஞர் ஹண்டி பேரின்பநாயகத்தின் சன்னிதானத்தில் காணும் வாய்ப்பு கிடைத்தது. அன்று தொட்டு இன்று வரைக்கும், அரசியல், சமுதாய கருத்து வேறுபாடுகள் உண்டான போதும் ஹாண்டி மாஸ்ரரும், கனகநாயகமும் எனது இரு பெரும் பொக்கிஷங்களாகத் தொடர்ந்தனர்.

யாழ்ப்பாண இளைஞர் சங்கம் நாட்டுக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்ற சங்கநாதம் ஊதிய, செல்வாக்குக் காலத்தில் இதனை உருவாக்கிய பெரியார்கள் அனைவருக்கும் ஹாண்டி மாஸ்ரர் சூத்திர தாரியாக இருந்தார். அக்காலத்தில் நறுமணம் கமழ்ந்த வாலிபர் காங்கிரசை நாடிய வண்டுகள் பல. கனகநாயகம், நடேசன், துரைரத்தினம், கலைப்புலவர் நவரத்தினம், கே. சி. தங்கராஜா போன்றோர் காங்கிரஸ் வீழ்ச்சியைக் கண்ட போதும், தங்கள் நட்பை பறி கொடுக்கவில்லை. பிற்காலத்தில் ஏற்பட்ட பிரிவினையால் அரசியல் வேறுபாடுகள் தோன்றிய போதும் அவர்கள் பண்புடைய தேசிய வாதிகளாகத் திகழ்ந்தனர்.

அன்று தோன்றிய சுயாதீன உணர்வே கொழும்புஆனந்தா கல்லூரியில் தமிழ்த்துறைக்கு தலைவராகவிருந்த அமரர் கனகநாயகத்துக்கு சுதந்திர வாழ்வுக்குரித்தான சட்டநிபுணர் வாழ்க்கைக்கு வித்திட்டது. சுமார் ஐம்பது வருடம் விடும் 'கோடும்' ஒன்றாய்ச் சங்கமித்த நீண்ட வாழ்வில் அவருடைய தனித்துவ அனுபவங்கள் ஒரு ஆராய்ச்சி ஏட்

-ந. சபாரத்தினம்-

டுக்கு இடமளிக்கும். நீதிவான், எதிர்வாத சட்டநிபுணர். வழக்காளி, எதிரி, சாட்சி எவராலும் ஏன்பரம்பொருள் தானும் குறுக்கிட்டு தமது கருத்தை ஆட்சேபித்தால், எவ்வித தாக்கமுமின்றி ஒரு சிறு பகிடியால் சிரிப்பைக் கிளப்பி அந்தச் சிரிப்பில் எதிர்ப்பு சாம்பராய் போவது சாதாரண அனுபவம்.

யாழ்ப்பாண பெரிய தெருவும் முதலாம் குறுக்குத்தெருவும் சந்திக்கும் முச்சந்தியில் நின்ற வழக்காளி ஒருவர் நல்ல அப்புக்காத்தை ஏற்படுத்த விசாரணை நடத்துகிறார். 'உங்களுக்கு வழக்கில் வெற்றிவேண்டுமானால் அதோ வடக்குப்பக்கத்தில் ஒரு சிறு தூரம் செல்ல தகுந்த நிபுணரைக் கந்தோரில் சந்திக்கவும். வெற்றி மட்டுமல்ல எதிரியை தகர்த்து இனிமேல் கோடேறுது மலையேற வைக்கும் நோக்கமிருந்தால் அந்த தெற்குப்பக்கத்தில் பச்சை வர்ண வீடு தெரிகிறது. அந்த வீட்டின் சொந்தக்காரரே அந்த நோக்கத்துக்கு வெற்றி காண வல்லவர்' என்று கனகநாயகம் வீட்டைக் காட்டுவது பழைய வழக்கமாயிருந்தது.

நகைச்சுவை உணர்வு சாதாரணமானதல்ல. இது ஒரு தெய்வீக சக்தி, பரிகாசம் வேறு, சிரிக்கவைத்து சிந்திக்கப் பண்ணும் ஆற்றல் வேறொன்று என்பதை ஒரு முறை எனக்கு எஸ். ஆர். விளக்கினார். ஒரு சபையை ஐந்து நிமிடத்தில் சிரிக்கவைக்காத பேச்சுக் குப்பைக்குப் போக வேண்டியதென்றார். இவ்வித அவலம் தனக்கும் உண்டென்று பயபக்தியுடன் சொன்ன மகா ரசிகன், ஒருமுறை தலைமை தாங்கி நடத்திய பிரியாவிடை வைபவத்தில் தமது நாவுக்கு கால்கட்டு கைக்கட்டு இருப்பதாகச் சொன்னார். நாம் இருவரும் ஒரே காரில் சென்ற வைபவம் அது.

ஆயிரக்கணக்கான மக்கள் வாயூறிக்கொண்டு அவருடைய சொற்கள் ஒவ்வொன்றையும் ஆவலுடன் கேட்டனர். ஐந்துநிமிடம் சென்றது. அவருக்குண்டான விரக்தியை ஆரம்பத்திலே கிளிறிவிடுமளவில், அவருடைய மேசையில் வைக்கப்பட்ட நூல் ஒன்றை அருகில் இருந்தவர் எடுக்க எத்தனித்தார். 'புத்தகத்தில் கைவைத்தால் நடப்பது வேறு' என்று கர்ச்சித்தார். சபை கொல்லெனச் சிரித்தது. சுமார் கால்மணி நேரம் வழக்கம்போல சபை குதூகலித்துக் களைத்து அதன் பின் நடைபெற்ற சிற்றுண்டி விருந்தில் அந்தக் களைப்பை ஆற்றியது. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வமென்பது அன்று தான் எனக்குப் புலப்பட்டது.

'செனட்டர்' சிரேஷ்ட சட்ட நிபுணராகத் திகழ்ந்த போதும் அவருடைய நண்பர் குழாம் பிரபல ஆசிரியர் கூடமாகவே அமைந்தது. பேரறிஞர் ஹாண்டி பேரின்பநாயகம், ஆசிரியப் பெருந்தகை தம்பர், பேராசிரியர் நேசையா போன்ற உத்தமர்களை நன்குமதித்து நாட்டுக்கு உகந்த தேசியக் கல்வி பற்றிய அரிய கருத்துக்கள் திரட்டுவது அவருடைய பிரதான முயற்சியாக இருந்தது.

அதுவும் சைவக்கல்வி என்றால் இந்து போட் ராசரத்தினத்தின் சேவையைத் தொடர்ந்து அனாதை இல்லம் நடத்துவதிலும் இராமநாத வள்ளலின் தர்மகர்த்தாசபையின் முக்கிய பொறுப்பாளியாக சிலவேளைகளில் தனித்து நின்றுபோராடி தமது சொந்தச் செலவில் வெற்றி கண்ட வீரனாகத் திகழ்ந்தார். நாவலர் பெருமானின் வாரிசுகளில் ஒருவராக ஆரவாரமற்ற பணி புரிந்தார்.

மனித வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்பும் கவலையும் ஏமாற்றங்களும் அவரைத் தானும் விட்டு வைக்கவில்லை. ஆனால் அவரது வாழ்க்கை பாழாகாது இசைப்பட வாழ்ந்தாரானால் அதற்கு நாமே சிரித்து மற்றவரையும் சிரிக்க வைக்கும் சக்திதான் முக்கிய காரணம். 'தேனையும் பாலையும் போல நகைச்சுவை எல்லோரையும் வசியப்படுத்த வல்லது. உலகியல்பைப் புலப்படுத்துவதோடு நம்முடைய உடலிலுள்ள இரத்தோட்டத்தையும் துரிதப்படுத்தி முறுக்கேறிய நரம்புகளுக்கு பரிகாரம் போன்ற நற்பயன் அளிக்கின்றது. இதற்கு மன்னனாய்த் திகழ்ந்த மாமனிதன் எங்கள் மத்தியில் இல்லை.

இன்று எஸ். ஆர். கனகநாயகத்தின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.



நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் சென்றமாதம் நிகழ்ந்த அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 10 ஆவது ஆண்டு மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது ... முதலாவது படத்திலும், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுவதை இரண்டாவது படத்திலும், மாநாட்டுக்கு வருகை தந்தவர்களில் ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (இ - 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்டவருக்கு கடன் வழங்குவது குறித்து வங்கி மாநாடு நடத்தும்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ் மாவட்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவிருக்கும் கடன் உதவித் திட்டங்கள் சம்பந்தமாக அடுத்த வாரம் இலங்கை வங்கி மாநாடொன்றை நடாத்தவிருக்கிறது.

சமய நிறுவனங்கள், பொது நல ஸ்தாபனங்கள் மூலமாக அந்த ஸ்தாபனங்களின் சிபார்சுடன் இலங்கை வங்கி சுய தொழில் வாய்ப்புக்கு பலதரப்பட்ட கடன்களை வழங்கவிருக்கிறது.

இவ்வமைப்புக்களை அழைத்து விசேட மாநாடு ஒன்றைக் கூட்டி அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து விளக்கமளிக்கப்படவிருப்பதாக வங்கி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-3)

## செயலகத்துக்கு 'பிக்கப்' வான்கள்

மட்டக்களப்பு செயலகத்திற்கு மத்திய அரசினால் புதிதாகப் 15 டட்சன் பிக்கப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வாகனங்கள் உதவி அரச அதிபர்கள் பாவனைக்கு வழங்கப்படும் எனச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச - 21)

## அத்துளு நீர்விநியோகம் பாதிப்பு
## பொது மக்கள் அவதி

கரவெட்டி ஜூன் 14

கரவெட்டி அத்துளு நன்னீர்க் கிணற்றில் நீரின்மையால் நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக தினமும் காலையில் ஒரு மணி நேரம் மட்டுமே நீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது. முன்னர் மாலையிலும் நீர் விநியோகிக்கப்பட்டது.

இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்னீருக்காக அயற்கிராமங்களை நாட வேண்டி ஏற்பட்டுள்ளது என அறிய வருகின்றது.

இதேவேளை நீரைத் தாங்கிக்கு நிரப்பும் இயந்திரம் ஒன்று நீண்டகாலமாகத்திருத்தப்படாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. நீர்த்தாங்கிக்குரிய கிணற்றில் நீர்போதிய அளவில் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து படிப்படியாக நீர் விநியோகம் நிறுத்தப்படுவதால் அத்துளுநீர் விநியோக திட்டமே நிறுத்தப்படலாம் என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. (க-70)

## உணவு முத்திரை

வேலணை, ஜூன் 14

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் 4 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

3 ஆவது தொடர் உணவு முத்திரை பெற்ற குடும்பங்களுக்கே 4 ஆவது தொடர் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

31 - 10 - 1988 இற்கு முன்னர் பிறந்த குழந்தைகளுக்கான உணவு முத்திரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

31 - 10 - 1988 இற்கு பின்னர் இன்றுவரை பிறந்த குழந்தைகளுக்கான உணவு முத்திரை வழங்குவது சம்பந்தமான அறிவித்தல் கிடைத்ததும் குழந்தைகளுக்கான 4 ஆவது தொடர் உணவு முத்திரைகள் வழங்கப்படும் என தெரியவருகிறது. (ச-167)

## முல்லையில் படம்

முல்லைத்தீவு, ஜூன் 14

முதன் முதலில் முல்லைத்தீவு நடிகர்களால் உருவாக்கப்பட்ட 'வாழ்த்துங்கள்' என்ற பாடும்மீன் மூவிஸ் சாரின் படத்தை முல்லை மாவட்ட பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் திரு. த. சிவலிங்கம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

முல்லைத்தீவு வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு. சி. சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றினர் [ச]

## மீனவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 14

போரூட் நிறுவனம் ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள நல்ஒழுக்க சங்கங்கள் ஊடாக காரைநகர், மருதபுரம், வியாவில், நீலங்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஏழை மீனவர்களுக்கு ரூபா 50,000 பெறுமதியான கட்டுமரங்களை சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் வழங்கி உள்ளது.

அத்துடன் இக்கிராம மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் படகில் இணைக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நீலங்காடு நல் ஒழுக்க சங்கத் தலைவர் திரு. ஐ. நடராசா தெரிவித்துள்ளார். (ச)

## உடற் பயிற்சி போட்டி

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

17 வயது, 19 வயது ஆண்கள் பிரிவுகள் இரண்டிலும் தர்மபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது.

19 வயது பெண்கள் பிரிவில் வட்டக்கச்சி மகாவித்தியாலயமும், 17 வயது பெண்கள் பிரிவில் பரந்தன் இந்து மகாவித்தியாலயமும் முதலாம் இடங்களைப் பெற்றன.

கிளிநொச்சி விளையாட்டு கல்வி அதிகாரி திருமதி சூரியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு: கே. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-76)


"டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!



குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் - பின் - சேவை ஒழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிரமாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.

கிடைக்கும் ரகங்கள் -
12" மற்றும் 14" கறுப்பு/வெள்ளை; 14" வர்ணம் (ஸ்டீரியோ) மற்றும் (மொனிட்டர்); 16" வர்ணம்; 20" வர்ணம்,
விலை, குறைந்தது ரூ. 4,390/- முதல்.

சிங்கர் தொலைக்காட்சி.

உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

**பொருள்:**

செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவனுக்குபணிவு வேண்டும். செல்வம் குறைந்து சுருங்கும் வறுமையுள்ள காலத்தில் பணியாத உயர்வு வேண்டும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 / 23078
14 - 06 - 1989　த. பெ இல: 23

## தூர விலக்கிட வேண்டும்

எய்ட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணம் தர வேண்டும் என்று சுகாதார அமைச்சு திறைசேரியிடம் கேட்டது. இல்லை; அவ்வாறு பணம் தரமுடியாது, நிதி ஒதுக்க முடியாது என்று திறைசேரி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டதாம்!

நிதி ஒதுக்க முடியாது என்று திறைசேரி கூறியதை விட, அதற்குத் தெரிவிக்கப்பட்ட காரணம் தான் வேடிக்கையானது; சிரிப்புக்கு இடமானது; மடமைத் தனமானது!

இலங்கைக்கு எய்ட்ஸ் நோய் பயமுறுத்தல் ஏற்படவில்லை. எனவே தடுப்பு இயக்கம் நடத்த பணம் தரப்பட மாட்டாது — இவ்வாறு திறைசேரி தெரிவித்திருக்கிறது. இதனை சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் திட்டவட்டமாக ஊர்ஜிதம் செய்து கவலையும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பணப்பெட்டி வெறுமனே கிடப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். 1988 ஆம் ஆண்டில், வரவு - செலவில் பற்றுக்குறை 12.6 சதவீதமாக உயர்ந்ததாக மத்திய வங்கி அறிக்கையே ஒப்புக்கொள்கிறது. வரவை விடச் செலவினம் உயர்ந்து செல்லும் போக்கு, நாட்டின் பொருளியல் வரைபடத்தில் பருத்த, பெருத்த கரும்புள்ளிகளை இட்டுள்ளதை இலகுவில் எவரும் புரிந்து கொள்ள முடியும்!

ஆனால் அரசும், அதன் திணைக்களங்களும், அவற்றைக் கட்டி ஆள அதிகாரிகளும் என்று எல்லாம் யார் நலனுக்காக? மக்கள் நலனுக்காக! மக்கள் அழிந்து விட்டால் அரசு எங்கே, ஆட்சி அமைப்புகள் எங்கே? அதிகாரிகள் தான் எதற்காக?

இந்தச் சின்ன விடயம் புரியாத 'வித்துவான்கள்' திறைசேரியில் அதிகாரிகளாக இருக்கிறார்களே என்பது வெட்கத்திலும் வெட்கம்!

வருமுன் தடுப்பது தான் எந்த விவகாரத்திலும் விவேகமானது. அதுவும் குறிப்பாக, தொற்று நோய்கள் விடயத்தில் முன்னேற்பாடாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமே மக்களைக் காப்பாற்றலாம்.

மலேரியா என்றும், அம்மை என்றும், காசம் என்றும் பயங்கரத் தொற்று நோய்கள் நாட்டு மக்களைப் பயமுறுத்தியபோது அவற்றுக்கெனத் தனித் தனியே தடுப்புப் பிரிவுகள் உண்டாக்கப்பட்டதை திறைசேரி அதிகாரிகள் அறியாரோ!

முன்னர் வந்த பயங்கர நோய்கள் எல்லாவற்றையும் விட, எய்ட்ஸ் கொடியது என்பதைப் பாடசாலை மாணவர்கள் கூட அறிந்திருக்கிறார்கள். வெகு வேகமாகப் பரவி, பல்லாயிரக்கணக்கான சாவிகளைப் பிடித்து, அவர்கள் மூலம் மனித குலத்தையே அழித்து, சந்ததிகளையும் முடக்கிவிடக் கூடிய அரக்க நோய் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர் எச்சரித்து வருவது, 'ஏயர் கண்டிசன்' அறைகளில் இருந்து பணிபுரியும் திறைசேரி அதிகாரிகளுக்குத் தெரியாமல் போனது எங்ஙனமோ?

வெளி உலகம் தெரியாதவர்கள், அதிகாரம் பண்ணுவதற்குத் தொடங்கினால் நாடும் மக்களும் உருப்பட்ட மாதிரித் தான்! நிலத்துக்குள் தலையைப் புதைத்த தீக்கோழிகள் போல இருக்கும் அதிகாரிகளை, அரச உயர்பீடம் தூக்கி வீசாவிட்டால் மக்கள் அரசுக்குப் பதிலாக, அதிகாரிகள் அரசுதான் மிஞ்சும்!

14 ஆவது எய்ட்ஸ் நோயாளியும் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர், எய்ட்ஸ் நோய் பயமுறுத்தல் இன்னும் உண்டாகவில்லை என்று எண்ணும் திறைசேரி அதிகாரிகள் கண்களில், 14 லட்சம் மக்களும் [அவர்கள் சந்ததியினரும் சேர்ந்து] பாதிக்கப்பட்ட பின்னர் தான் சிவப்புக் கோடு தெரியுமோ? அதுவரை அவர்கள் யதார்த்த நிலை தெரியாத மாயைக்குள் மூழ்கியிருந்து மஞ்சள் கோட்டைத் தான் பார்ப்பார்கள்!

இது எய்ட்ஸ் நோயைவிடப் படுபயங்கர நிலையைத் தோற்றுவிக்கும். எனவே திறைசேரி அதிகாரிகளின் போக்குக் குறித்து வெறும் கவலை தெரிவிப்பதோடு நிற்காமல், சுகாதார அமைச்சர் நிலைமையைத் தெளிவுபடுத்தி, எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைக்கு பாரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும்.

உலக நாடு ஒவ்வொன்றும் எய்ட்ஸ் ஆபத்தை எதிர் கொள்வதில் அக்கறை காட்டிவரும் வேளையில், இலங்கை மட்டும் கண்மூடிக் கொண்டிருந்தால், எதிர்காலத்தில் பெரும் அனர்த்தங்களை அனுபவிக்க நேரிடும்.

வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்ற முதுமொழி வெறும் வாசகம் அல்ல, செயலில் காட்ட வேண்டியது என்று திறைசேரி அதிகாரிகளின் தலையில் குட்டிச் சொல்ல வேண்டும். பணத்தைச் செலவிட வேண்டிய முதன்மைத் தேவை எது என்பது தெரியாதவர்களை பணப் பெட்டியை விட்டு தூர விலக்கி வைப்பது மிக அவசியம்.

# உஸ்பெகிஸ்தானில் அமைதி; கலவரத்தில் 100 பேர் பலி!

மாஸ்கோ ஜூன் 13

சோவியத் யூனியனின் மத்திய ஆசியக் குடியரசான உஸ்பெகிஸ்தானில் ஏற்பட்ட இனக்கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக மாஸ்கோ அறிவித்தது.

உஸ்பெக்கிஸ் இனத்தவருக்கும் மெஸ்கெட்டியன்ஸ் இனத்தவருக்கும் இடையே இடம் பெற்ற ஒரு வார கால மோதலில் சுமார் 100பேர் வரை கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

அமெ. தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள

# விஞ்ஞானி பாங் தப்பிச்செல்வதைத் தடுக்க சீனஎல்லைகள் மூடப்பட்டன

## பீகிங் - வாஷிங்டன் உறவு மோசமடைகிறது

பீகிங், ஜூன் 13

சீனா தனது எல்லைகளை மூடி விட்டது.

எல்லைக் காவல் படையினரை உஷார் நிலையில் இருக்கும்படி பீகிங் அரசு உத்தரவிட்டது.

பீகிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அரசியல் தஞ்சமடைந்துள்ள சீன அதிருப்தியாளரான விஞ்ஞானி திரு. பாங் லிஸ்ஹியும் அவரது மனைவி திருமதி லிஸ்ஹியும் தப்பிச் செல்லாமல் இருப்பதற்காகவே எல்லைகளை மூடிவிட்டதாக சீன அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

சீன தம்பதியினர் இன்னமும் அமெரிக்கத் தூதரகத்திலேயே தங்கியிருக்கின்றனர்.

### நெருக்கடி

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே இராஜதந்திர நெருக்கடி உருவாகி வருகிறது.

கடந்த மூன்றும் திகதி மாணவர் ஜனநாயகக் கிளர்ச்சியை அடக்க தியனன்மன் சதுக்கத்தில் சீன அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

அப்போது மாணவர் கிளர்ச்சிக்கு முன்னணியில் நின்று போராடியவரான திரு. பாங் லிஸ்ஹியும் அவரது மனைவி திருமதி லிஸ்ஹியும் பீகிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தஞ்சமடைந்தனர்.

அவர்களைக் கைது செய்ய சீன அரசு உத்தரவு பிறப்பித்தது. அவர்களை விடுவிக்க முடியாது என்று அமெரிக்கா மறுத்திருக்கிறது

### ஒலிபரப்புத் தடை

இந்த நிலையில் — அமெரிக்காவின் வோய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு சீனாவில் கேட்கமுடியாதபடி சீன அரசு குழப்பி வருகிறது.

அதே வேளை உலகின் பல நாடுகளில் மாணவர்களின் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சீனப் பிரசைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பி வைக்கும்படி சீனத் தூதரகங்கள் பணிக்கப்பட்டுள்ளன. [எ]

# மத்திய அரசின் தலையீடுகளை தமிழக அரசு அனுமதிக்காது!

## கருணாநிதி எச்சரிக்கை

திருச்சி, ஜூன் 13

மாநில சட்டசபைகளுக்கும் நாடாளுமன்றத்துக்கும் ஒரே சமயத்தில் தேர்தலை நடத்தும் மத்திய அரசின் திட்டம் பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

திருச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் முதலமைச்சர் சொன்னதாவது;

மத்திய அரசின் இந்த யோசனை ஜனநாயகத்துக்கு முரணானது. இதை அமுல் நடத்த பிரதமர் காந்தி முயற்சிப்பின் இது ஜனநாயக விரோத நடவடிக்கையாகக் கவனிக்கப்படும்.

கிராமங்களுக்கு அதிகாரங்கள் வழங்குவதற்காக பிரதமர் எடுத்து வரும் முயற்சிகளை நான் எதிர்க்கவில்லை. மத்திய அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக அனைத்தையும் எதிர்ப்பது எனது நோக்கம் அல்ல.

தனது இலட்சியத்தை அடைய பிரதமர் கடைப்பிடிக்கும் உத்திகளைத்தான் எதிர்க்கின்றேன்.

உள்ளாட்சி நிர்வாகங்களில் மத்திய அரசு நேரடியாகத் தலையிடுவதை தமிழக அரசு அனுமதிக்கப்போவது இல்லை.

முதலமைச்சர் பிரதமர் என்ற ரீதியிலான உறவு சுமுகமாகவே உள்ளது. அதைத் குழப்ப சிலர் முயற்சிக்கின்றார்கள்

இப்படி முதலமைச்சர் கருணாநிதி சொன்னார். (எ)

# நாளை கல்கத்தாவில்

# ராஜீவ் - ஜோதிபாசு பேச்சு இந்திய அரசியலில் திருப்பம்?

கல்கத்தா, ஜூன் 13

வருகிற 15ஆம் திகதி கல்கத்தாவில் பிரதமர் ராஜீவ் காந்தியும் மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பசுவும் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

இந்திய அரசியலில் இவர்களின் பேச்சுக்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

பொதுத் தேர்தல் நெருங்குகின்ற சமயத்தில் இந்திய மாக்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான திரு. ஜோதி பசு, பிரதமர் காந்தியுடன் நடத்தும் பேச்சு திரு. வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேசிய முன்னணியிலும் இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகிக்கின்றது:

கல்கத்தாவில் ராஜ்பவனில் வருகிற 15ஆம் திகதி இந்திரா காந்தியின் படத்தை திரை நீக்கம் செய்ய பிரதமர் ராஜீவை முதலமைச்சர் ஜோதி பசு அழைத்திருக்கிறார்.

தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜனதா தள் (தலைவர் வி. பி. சிங்) வகுப்புவாதக் கட்சியாகக் கருதப்படும் பாரதிய ஜனதாக்கட்சியுடன் தொகுதி உடன்பாடு காண விருப்பம் தெரிவித்துள்ளது.

இது திரு. ஜோதிபசுவுக்குப் பிடிக்கவில்லை. அதைத் தொடர்ந்து ராஜீவ் - ஜோதி பசு பேச்சுக்கள் இந்திய அரசியலில் புதிய திருப்பம் ஒன்றுக்கு வித்திடலாம் என்று கருதப்படுகிறது. (எ)

## நிராகரிப்பு

வாஷிங்டன், ஜூன் 13

பாகிஸ்தானில் உள்ள அணு நிலையங்களைப் பார்வையிட அனுமதிக்கும்படி அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை பிரதமர் பெனாஸிர் பூட்டோ நிராகரித்துவிட்டார்.

இத் தகவலை நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் வெளியிட்டது. [எயி]

# ராமராவ் சினிமாவில் நடிக்க தடைவிதிக்குமாறு வழக்கு

ஹைதராபாத், ஜூன் 13

ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ் சினிமாப் படத்தில் நடிப்பதற்குத் தடை விதிக்கவேண்டும் என்று கோரி மாநில உயர்நீதி மன்றத்தில் இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மனுவில் அவர்கள் கூறி இருப்பதாவது:

முதலமைச்சர் அரசியல் சட்டப்படி நடக்கவேண்டியவர். அவர் வர்த்தக ரீதியில் படம் தயாரித்து, இயக்கி நடிக்கப்போவதன் மூலம் அவர் முதலமைச்சர் பதவியை இழக்கிறார்.

எனவே அவர் சினிமாவில் நடிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் —

இப்படி காங்கிரஸ் பிரமுகர்களான டாக்டர் பலராம், மல்லிகார்ஜுனராவ் ஆகியோர் கூறியுள்ளனர்.

ராமராவுக்கு எதிராகத் தெலுங்கு நடிகர் நரசிம்மராஜு, முன்னாள் அமைச்சர் சீனிவாசலு ரட்டியும் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

திரு ராமராவ் விஸ்வாமித்திரர் என்ற படத்தைத் தயாரித்து வருகின்றார்.

விஸ்வாமித்திரராக ராமராவும் மேனகையாக மீனாட்சி சேஷாத்திரியும் நடிக்கின்றனர். [எ]

# உஷார் நிலையில் சாட் படைகள்

பாரிஸ், ஜூன் 13

சூடான் எல்லையில் பதற்றம் அதிகரித்திருப்பது காரணமாக தனது படைகளை உஷார் நிலையில் வைத்திருப்பதாக சாட் அதிபர் ஹிஸ்ஸேன ஹாப்ர பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்டுக்கு அறிவித்தார். [எ]

***********

# உபகரண அன்பளிப்பு

வடமராட்சி, ஜூன் 14

தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெறும் சகல முறைசாராக்கல்வி நெறிப் பயிற்சிகளுக்கும் புனர்வாழ்வுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (க - 160)

# நாடாளுமன்றத்துடன் சட்டசபைகளையும் கலைத்து தேர்தல் நடத்தராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவின் சகல மாநிலங்களின் சட்டசபைகளையும் கலைத்து விட்டு அவற்றிற்கான தேர்தலையும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலையும் நடத்தஇந்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகிறது.

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்காக இந்திய அரசியல் யாப்பு அண்மையில் திருத்தப்பட்டது.

தற்போது மாநிலங்களில் உள்ள சட்ட சபைகள் 21 வயதுக்கு மேற்பட்டவர்களின் வாக்குரிமையை பயன்படுத்தியே தெரிவு செய்யப்பட்டவையாகும்.

ஆகவே மாநில சட்டசபைகளைத் தெரிவு செய்ய வாக்குரிமை பெற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்காகவே சகல சட்ட சபைகளையும் நடாளுமன்றத்துடன் கலைத்துத் தேர்தலை நடத்தும் திட்டம் ஒன்றை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. [எ]

# அணு ஆயுத பரிசோதனை

வெல்லிங்டன், ஜூன் 13

கடந்த ஞாயிறு தென் பசுபிக்கில் 70 கிலோ தொன் எடையுள்ள அணு ஆயுதம் ஒன்றைபிரெஞ்சு அரசு வெடிக்க வைத்துப் பரீட்சித்தது.

இந்த ஆண்டில் பிரான்ஸ் நடத்திய மூன்றாவது அணு பரிசோதனை இதுவாகும். [எ]

# நெல்லியடியில் ம. ம. வி. யில் மலசலகூடம் இல்லை

வடமராட்சி, ஜூன் 14

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மலசலகூட வசதி இல்லை.

கலவரங்களின்போது சேதமாகிய மலசல கூடங்கள் இதுவரை திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க- 160)

********************************************

யாழ். பல்கலைக்கழக

# சித்தவைத்தியம், சத்திரசிகிச்சை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட சித்த வைத்தியம் சத்திர சிகிச்சை (1988) முதலாம் ஆண்டுப் பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்தனர்.

முதலாம் வகுப்பு: செல்வி எஸ். சியாமளா (மருத்துவ வரலாறு உடலியல், உயர் தமிழ் ஆகிய பாடங்களில் விசேட சித்தி)

இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு: எவருமில்லை

இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு: செல்வி எம். மனோரஞ்சிதமலர் (''பாதரத''வில் விசேட சித்தி)

சாதாரண சித்தி: எஸ். கலைமகள், கே. றேனுகா

### இரண்டாம் ஆண்டு

முதலாம் வகுப்பு: எவருமில்லை.

இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு: செல்வி பி. பத்மலோஜினி (உயர் தமிழில் விசேட சித்தி) எஸ் வைஜயந்தி

இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு! எஸ், ஸ்ரீசுப்பிரமணியம், பி. சுரேசன் (உடற்கூறு இயலில்) விசேட சித்தி)

சாதாரண சித்தி: எஸ். சுமதி, எஸ். சிவமலர், எஸ். திரிபுரநாயகி

### மூன்றும் ஆண்டு

முதலாம் வகுப்பு: எவருமில்லை

இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு: கே. நீலவேணி அம்மாள், பி. சைலஜா (உயர் தமிழில் விசேட சித்தி)

இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு; ஏ. அம்பிகை, எஸ். அமுதாம்பாள் (உயர் தமிழில் விசேட சித்தி) கே. நாகேஸ்வரி (பிடிங்களின் தன்மையும் பரிகாரங்களும் பாடத்தில் விசேட சித்தி Distinction in Toxicology) என். பவளராணி ஆர். சிவசக்தி, எஸ். சுமதி, ரி. ஜலீன், வெரோனா, கே. சற்குணதேவி

சாதாரண சித்தி: என். ஜெயலக்ஷ்மி, ரி. நவலக்ஷ்மி, எஸ். பெலீசியா ராஜி, கே. சிவராசா.

### நான்காம் ஆண்டு

முதலாம் வகுப்பு: எவரும் இல்லை.

இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு: பி. கலைச்செல்வி (நிதான சிகிற்சா II விசேட சித்தி Distinction in Nidana Chikitsa II) என். ஷயாமா (நிதான சிகிற்சா I விசேட சித்தி (Distinction in Nidana Chikitsa I) வி. விவியன் நிதான சிகிற்சாவும் சலாக்கியமும் விசேட சித்தி] [Di-Stinction in nidana chikitsa II Salakyam]

இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு பி. மங்களேஸ்வரி, என். திலகேஸ்வரி பி.வி. விமலதாஸ்,

சாதாரண சித்தி: எஸ். அருந்தவராணி, ஆர். ஜயந்தினி, வி. கனகேஸ்வரி, கே. மங்களகுமாரி, ஏ. இராஜராஜேஸ்வரி, பி. சாந்தநாயகி, சி. திலகேஸ்வரி, எஸ். வடிவேலு, எஸ். யோகேந்திரன், ஐ. ஜபநாமகணேசன்.

யாழ் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட சித்த மருத்துவம் சத்திர சிகிச்சை 1988ஆம் ஆண்டு அனுபந்த முதலாம் ஆண்டுப் பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

சாதாரண சித்தி: பி.இரத்தினேஸ்வரி, எஸ். இராஜகுமார், ரி. சாந்தினி, ஆர். சாந்தினி, சி. சுசந்தி, என். வர்ணகுலேந்திரன்.

### இரண்டாம் ஆண்டு

சாதாரண சித்தி: என். கௌரீஸ்வரி.

### மூன்றும் ஆண்டு

சாதாரண சித்தி: ஆர். அருந்ததி, என். சசிகலா.

### நான்காம் ஆண்டு

சாதாரண சித்தி: ஆர். நாகேஸ்வரி, ஆர். பாஸ்கரன் ரி. சத்தியசீலன். [ச]

# சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 14

பிரெஞ்சு கலாசாரப் புரட்சி சம்பந்தமான மாணவர்களுக் கிடையிலான சித்திரப் போட்டி ஒன்றை பிரெஞ்சு தூதரகம் ஒழுங்கு செய்துள்ளது.

இப் போட்டியில் பங்குற்ற விரும்பும் மாணவர்கள் யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தில் தங்கள் ஆக்கங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

அத்துடன் பிரெஞ்சு கலாசாரப் புரட்சி சம்பந்தமான விவரணப் படங்கள் இச்சங்கத்தில் பார்வைக்கு [illegible] பட்டுள்ளது. (இ - 3)

# யாழ் வாதரவத்தை பஸ்சேவை

கோப்பாய், ஜூன் 14

வடபிராந்திய போக்குவரத்துச் சபை தனது போக்குவரத்துசேவைகளை விஸ்தரித்து இருப்பதனால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் வாதரவத்தை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி வட பிராந்திய போக்குவரத்து சபைத்தலைவர் மகஜர் மூலம் கேட்கப் பட்டுள்ளார். (இ - 72)

## அன்னே நாகம்மாத் தாயே!

**எடுப்பு**

அன்னே நாகம்மாத் தாயே - உந்தன்
அமுத சுரபியில் அமுதத்தை உண்டோம்
[அன்னே]

**தொடுப்பு**

முன்னே கோமுகிப் பொய்கை - அதில்
முகிழ்த்த அட்சய பாத்திரச் செய்கை
(அன்னே)

**முடிப்பு**

என்னே பக்தர்கள் நாட்டம் - அங்கே
இரவு பகலாகப் பசிப்பிணிக் கூட்டம்
பின்னே திருவருட் தேட்டம் - புகழ்
பெற்றபெண் மேகலைக் கோட்டம்
[அன்னே]

நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

[இன்று [14-6-89] நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 10 ஆம் திருவிழா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Proce·sing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# உதயன்

14 - 06 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கட்டுநாயக்காவில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 14
கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
இந்திய ஏயர்லைன்ஸ் விமானம் ஒன்று கடத்தப்பட்டது என்று கடந்த திங்கள் கொழும்பில் வதந்தி நிலவியது.
இதைத் தொடர்ந்தே பாதுகாப்பு பலத்தப்பட்டது.

## மாணவரைப் பாதுகாக்க---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாறுகேட்பது நியாயமற்றது
நாட்டில் அராஜகம் நிலவுகின்றது; சட்டத்தை மீறுவதே பண்பாகக் கருதப்படுகின்றது.
ஆகவே, யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியில் பின்வரும் வேண்டுகோள்களை பொதுமக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆயுதம் தாங்கியோர், அரசியல் வாதிகள், படையினர் ஆகியோருக்கு நான் விடுக்கின்றேன்.
[1] எக்காரணம் கொண்டும் பாடசாலை வளவிற்குள் அதிபரின் அனுமதியின்றி உட்செல்லல் ஆகாது.
[2] வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போ அதிபரின் காரியாலயத்திற்கு அப்பால் கல்வித் திணைக்கள உத்தியோகத்தரைத் தவிர எவரும் செல்லல் ஆகாது.
[3] பாடசாலை வளவினுள்ளும் பாடசாலையை அண்மித்த பகுதியிலும் பாடசாலை நேரத்தில் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தவிர்க்கப்பட வேண்டும்.
[4] பாடசாலை வளவினுள் முகாமிட்டுள்ள படையினர் அவற்றை விட்டு அப்பால் முகாமிட்டு இருத்தலே சிறந்ததாகும்.
[5] மாணவர்கள் படையினரால் கைது செய்யப்படும் பட்சத்தில் பாடசாலை அதிபருக்கு உடனடியாக தகவல் எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.
மேலே குறிப்பிட்டுள்ள வேண்டுகோள்களை மனிதாபிமான முறையில் ஆராய்ந்து சம்பந்தப்பட்டோர் - அதாவது ஆயுதம் தாங்கியோர்- பாடசாலைக்கு வரும்போதும், பாடசாலையில் இருக்கும் போதும் பாடசாலையைவிட்டுச் செல்லும் போதும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியும் என பகிரங்க எழுத்து மூலமாக அறிவித்தல் விடும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## ஊழியர் இருவர் உயிரிழந்தனர்

கொழும்பு ஜூன் 14
நேற்று முன்தினம் நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின் போது இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த இரு ஊழியர்கள் உயிரிழந்தனர்.
தெனியாய பொலீஸ் பகுதியில் சாரதி ஒருவரும், கம்பளை ஹெம்மதகமவில் பஸ் கண்டக்டர் ஒருவரும் கொலை செய்யப்பட்டனர். (உ)

## ஜீப் எரிப்பு

கொழும்பு, ஜூன் 14
விவசாய அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டி ஒன்று பொலன்னறுவையில் மாணவர்களால் கடந்த திங்கள் எரிக்கப்பட்டது.
பொலன்னறுவ ரோயல் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இச் சம்பவம் இடம்பெற்றது. (உ-எ)

### வட,கிழக்கு---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
வரையுள்ள மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களில் பரீட்சைகளை தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகளை கோட்டக்கல்வி நிலையம் நடத்தும். (ஒ-3)

## யாழ். செயலகம் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். செயலகம் நேற்று இயங்கவில்லை.
காலையில் ஊழியர்கள் வந்தனராயினும் பணிபுரியாமலே பின்னர் திரும்பிச் சென்றனர். [ஒ-3]

## இந்தியத் தூதருடன் ஜனாதிபதி பேச்சு

கொழும்பு, ஜூன் 14
ஜனாதிபதி பிரேமதாஸாவை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் லால்மெஹ்ரோத்திரா நேற்று சந்தித்தார்.
இந்தியப் பிரசைகளின் பாதுகாப்புப் பற்றி இந்தியத் தூதர் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தினர்- (உ)

## ஊவாவில் ஊர்காவலர் அறுவர் பலி!

கொழும்பு. ஜூன் 14
ஊவா மாகாணத்தில் உள்ள தேயிலை தோட்டம் ஒன்றில் காவலில் ஈடுபட்டிருந்த ஊர் காவல் படையினர் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டது.
இச்சம்பவத்தில் ஆறு ஊர் காவல் படையினர் கொலையுண்டனர். பதில் தாக்குதலில் இரு தீவிரவாதிகள் பலியாகினர். (ஒ-எ)

## துப்பாக்கிச்சூடு

யாழ்ப்பாணம், ஜூன் 14
நேற்றுக் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் காயமடைந்தார்.
தவராசசிங்கம் தவசீலன் [வயது 19] என்பவரே காயம் அடைந்தவராவார். [ஒ-எ]

## சுட்டுக்கொலை

ஞாயிற்றுக்கிழமை இரவு உக்குளாயைச் சேர்ந்த இருவர் தமது வீடுகளில் இருந்தபோது இனந்தெரியாத ஆயுதக் கோஷ்டியினால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.
வவுனியா சத்திய சாயி சமித்தியின் உப தலைவரான சுப்பையா நிக்கலஸ் [51] என்பவரும் முத்தையா ஜோசப் என்பவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டனர்.
இதனிடையில் கடந்த சனியன்று கூடங்குளத்தில்வைத்து செல்வச்சந்திரன் என்ற இளைஞனும், ஓமந்தையில் சிவன் என்ற வயோதிபரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ-163)

### சுலோகங்கள்

யாழ்ப்பாண லொறிகளிலும் 'ஸ்பிறே' பெயின்டில் சுலோகங்களை ஜே. வி. பி. அமைப்பு அடித்துள்ளது.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் லொறிகளை மறித்தே இச் சுலோகங்கள் அடிக்கப்பட்டுள்ளன. (ஒ-3)

## மரண அறிவித்தல்கள்

### திரு அருளம்பலம் மயில்வாகனம்

(முன்னைநாள் Customs Wharf Clerk - கொழும்பு செல்லமுத்து சிவநாதன் கம்பனி)

நாவலர் வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. அ. மயில்வாகனம் 13-6-89இல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னபூரணம், காலஞ்சென்ற சிவகங்கை, சிவபாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற நாகலிங்கம் ஆச்சாரியார், காலஞ்சென்ற சச்சிதானந்தம் பத்தர், நடராசா பத்தர் ஆகியோரின் மைத்துனரும் —
மகாலட்சுமி, சண்முகநாதன் [இளைப்பாறிய எழுதுவினைஞர், மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு), பாலசுந்தரன் (சாந்தன் மின்தறி நிலையம், மாலி சந்தி - அல்வாய்), இந்திராணி, அனந்தநாராயணன் (குவைற்), சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும் —
சோதிலிங்கம் (உதயன் பத்திரிகை நிறுவனம்), றெங்கநாதன் (T. O., நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), இராசையா ஸ்ரீதரன் (உதயன் ஆசிரிய பகுதி), காலஞ்சென்ற அகிலாண்டநாயகி, ஞானேஸ்வரி, லலிதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் —
அங்கயற்கண்ணி (தபாற்கந்தோர் - பெரியகடை), பரந்தாமன் (மேற்கு ஜேர்மனி), பவானி (ஆசிரியை, நாவலர் மகா வித்தியாலயம்), அரவிந்தன், துஷ்யந்தன், ஜனனி, முகுந்தன், கலைவாணி, வைதேகி, வைகுந்தன், ரிஷாந்தன், நிதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் 287, நாவலர் வீதி ஆனைப்பந்தியில் நடைபெற்று பூதவுடல் இன்று 14-6-89 புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (சி/2701)

### சைவப்புலவர் நாகமுத்து பொன்னையா

மாதகல் மேற்கு, சைவப்புலவர் நாகமுத்து பொன்னையா (இளைப்பாறிய அதிபர், நுணசை வித்தியாலயம்) காலமாகி விட்டார். ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 13-6-89 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நா. சுப்பையா

மாதகல் மேற்கு,
மாதகல். (922)

### திரு. கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன்

(அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

திரு. கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன் 13-06-1989 அன்று காலமானார்.
இவர் அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை — திருமதி புவனேஸ்வரி கிருஷ்ணபிள்ளையின் கனிஷ்ட புத்திரனும், நித்தியானந்தன், நித்தியலட்சுமி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபாரட்ணம், விஜயரட்ணத்தின் மைத்துனருமாவார்.
அன்னாரது ஈமக்கிரியைகள் 13-06-1989 அன்று மாலை, மாசுவன், நீர்வேலியில் நடைபெற்றது.
இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. விஜயரட்ணம்

மாசுவன்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [11250]

### வல்லிபுரம் சிவசோதி (சோதி)

நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. வ. சிவசோதி 13-06-1989 அன்று காலை அகால மரணமானார்.
அன்னார் திருமகள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் முத்தையா வல்லிபுரத்தின் (இரத்தினம்) அருமைப் புதல்வனும், நாகலிங்கம் தங்கமணியின் அன்புக் கணவனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
முத்தையா வல்லிபுரம்
(தகப்பனார்)

[11253]

### சி. எஸ். மணியம் (C.S.M)

[சரஸ்வதி ஸ்ரோர்ஸ், நெல்லியடி மத்திய சந்தை]

சரஸ்வதி ஸ்ரோர்ஸ் (நெல்லியடி மத்திய சந்தை) உரிமையாளர் திரு. சி. சிவசுப்பிரமணியம் 13-06-1989 அன்று காலை அகால மரணமானார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-06-1989 இன்று மாலை 3 மணியளவில் நெல்லியடி சரஸ்வதி வித்தியாலய வீதியில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவை சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

தகவல்:
எம். கே. சிவாஸ்கரன்
(மருமகன்)

[11254]

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



### கே. கோபாலரத்தினம்

B. A. (Cey) S. L. A. S.
(செயலாளர் வடக்கு, கிழக்கு மாகாணசபை பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சு)

தோற்றம்: 18 - 11 - 1932
மறைவு: 15 - 05 - 1989

திங்களொன்று கடந்ததோ
தெய்வமகன் பிரிந்தின்று
எங்கள் துயர் தீருமோ
எத்தனை நாள் சென்றுமோ
சங்குல் பகல் உறங்குமோ
சடிதில் உமை மறக்கவோ!
பொங்கு துயரம் பீறிட
பொருந்தி வாழ்வ தெப்படி?
இங்கு நின்று வருந்தவே
வைத்தது உந்தன் பிரிவடா!

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள், உறவினர்கள்

குறிப்பு:- வீட்டுக் கிருத்திய அழைப்பு சூழ்நிலை காரணமாக தனித் தனியாக அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம். 15 - 06 - 89ல் (கொக்குவில்) வியாழக்கிழமை வீட்டு கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

(11252) நன்றி

## அரச ஊழியரை - - - -

போன்ற பொறுப்பு வாய்ந்த அலுவலகங்களுக்கு வேலைக்குச் செல்லாமலிருப்பதை, தமிழர்களின் நலனில் அக்கறையில்லாத ஸ்ரீலங்கா அரசு பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் எமது மக்களின் நலனில் அக்கறையுள்ள மாகாண அரசு இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்காது வாளாவிருக்க முடியாது.
ஏழை மக்களின் உணவு முத்திரைகள், பிச்சைச் சம்பளங்கள், உணவு விநியோகம், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப் பணிகள் போன்றன அரச அலுவலர்களின் அசமந்தப் போக்கால் தடைப்படுவது யாவரும் அறிந்ததே.
யாராவது அரச ஊழியர்கள் வேலைக்கு வராதுவிடின் அவர்கள் தமக்குரிய வேதனத்தைப் பெற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதி கிடைக்காது. ஸ்ரீலங்கா அரசின் செல்லப் பிள்ளைகளாக இருந்து கொண்டு வேலை செய்யாது விடினும், சம்பளம் வரும் என்ற நினைப்பை சகலரும் மறந்துவிட வேண்டும்.
அனுமதி பெறாது வேலைக்கு வராது நிற்றல் தண்டனைக்குரிய குற்றமாகும். வேலைக்கு வராமல் விடும் எவரையும் வேலை நீக்கம் செய்யும் அதிகாரம் ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமே உண்டு என்றதொரு அடிவருடல் மனப்பான்மை அடிமைப் புத்தி கொண்ட எமது சில அலுவலர்களுக்கு இருக்கலாம்.
ஆனால், வேலைக்கு வராதவர்களை தகுந்த காரணத்தைப் பெறாது கச்சேரிக்குள் நுழைய விடாதவாறு செய்து ஒரு ஒழுங்கான நிர்வாகத்தை — சீரான நிர்வாகத்தை — நடத்த மாகாண அரசுக்கு நடைமுறை அதிகாரங்கள் உண்டு.
சகல அலுவலர்களும், தத்தமது வேலைத் தலத்திற்கு உடனடியாக வேலைக்கு வரும்படி தயவுடன் கேட்கப்படுகின்றீர்கள். இந்தப் பணிவான வேண்டுகோளை உதாசீனம் செய்யும் எவரையும் 'மக்கள் சேவையாளர்' எனக் கருதாது 'மக்கள் விரோத சக்திகள்' என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டாம் என்பதே எமது கோரிக்கை; ஆனால் இது இறுதிக் கோரிக்கை'
மாகாண அரசின் இந்த வேண்டுகோளை சகல அலுவலர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.
இன்னும் ஓரிரு தினங்களில் சகல அரச அலுவலகங்களும் இயங்கும். அப்படி இயங்காமற்போனால் அதன்பின் விளைவுகளுக்கு சகல அரச ஊழியர்களும் ஒட்டு மொத்தமாகப் பொறுப்பேற்க வேண்டும்.
புதிய ஊழியர்களைப் போட்டு கச்சேரி, கூட்டுறவு அலுவலகங்கள் போன்ற சகல அலுவலகங்களையும் நடாத்தப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் இளைப்பாறுதல். இராஜினாமாச் செய்தல், மாற்றம் எடுத்துக் கொண்டு ஓடுதல்போன்ற எதுவும், மாகாண அரசுக்கு விரோதமான செயற்பாடுகள் எனக் கருதப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மிக மனவருத்தத்துடன் முன்கூட்டியே அறிவித்துக் கொள்ளுகின்றோம்.
மேலும், எந்த அரச அலுவலரும் வேலை செய்யும் பிரதேசத்தைவிட்டு ஏழு மைல் தூரத்திற்கு அப்பால் திணைக்களத் தலைவரின் அனுமதியின்றிச் செல்லமுடியாது. அப்படி எவராவது செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏமாற்றிவிட்டுச் செல்லும் எவரும் இடைநிறுத்தப்படுவர். அத்துடன் அத்தகைய அமைதியற்ற பிரயாணத்தினால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு அவரே பொறுப்பானவர். — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

### இலங்கை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்புள்ள ஒவ்வொருஅரச ஊழியரும் உணரவேண்டும்.
அரச அலுவலகங்கள்இயங்க மத்திய அரசும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.
அரச அலுவலகங்கள், அதிகாரிகளின் வீடுகள் உள்ள பகுதிகள் அனைத்துக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்— என்றார். (உ)

### யாழ் பல்கலைக்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கலைக் கழக மாணவர் சார்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தன் பூரண ஆதரவைத் தெரிவிக்கிறது.
மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் தோறும் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட இணைப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, இவ்விணைப்புக் குழுக்கள் மாணவர்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.
இம் முயற்சியில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஏனைய பல்கலைகழக சங்கங்களுடன் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளது. இதற்கு சகல பாடசாலைகளதும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு அவசியமானது—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### கனகர் முத்துவேலு நடராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகர் முத்துவேலு நடராசா (முன்னாள் உரிமையாளர், ராணி ஸ்ரோர்ஸ் காலி) காலமானார்
அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மீனலோசனி, மதனலோசனி [அமெரிக்கா], ரவீந்திரன் [ரவி ஸ்ரோர்ஸ், கலட்டி], புஷ்பராணி, ஜெயராணி, நிர்மலலோசனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
இவர் சிவலிங்கம், விக்னேஸ்வரன் (அமெரிக்கா), வசந்தராணி, கங்காதரன், இந்திரதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும், தனுஜா, கார்த்திகா, அபிரா, சாலினி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று புதன்கிழமை (14-6-89) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
A. சிவலிங்கம்

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 193/3 இல் உள்ள அச்சகத்தில் 14-06-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.